Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 03 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மாசி 17 | வெள்ளிக்கிழமை | (01.03.2013) | பக்கங்கள் 20 | ஓசை - 152

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
Tel - 0212225969
Hotline - 0212229497
(C/2278)
















## யாழ்.இசைவிழா இன்று கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இசைவிழா-2013 இன்று யாழ்.மாநகரசபை மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

இன்றும், நாளையும் உள்நாட்டு, வெளிநாட்டு கலைஞர்கள் பங்கு கொள்ளும் இந்த இசை விழாவைக் கண்டு களிப்பதற்கு அனுமதி இலவசமாக வழங்கப்படவுள்ளதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.விவசாயிகளுக்கு மானியம்; உற்பத்தியை மேம்படுத்த செயற்திட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மானியங்கள் வழங்கி விவசாயச் செய்கையை மேம்படுத்துவதற்கு எதிர் காலங்களில் துறைசார்ந்த திணைக்களங்கள் ஊடாக நடவடிக்கை முன்னெடுக்கப் படுமென ஈழமக்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கலைஞர்களுக்கும் இனி ஓய்வூதியம்

கலைஞர்களுக்காக ஓய்வூதியக் கொடுப்பனவுத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக கலாசாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. 'சுரக்கும்' (கடவுள் பாதுகாப்பு) என்ற பெயரில் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக்கு அமைய இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்துத்துறை கலைஞர்களும்

(19) ஆம் பக்கம் பார்க்க

# பிளவுறும் நிலையில் கூட்டமைப்பு
# 4 கட்சிகள் பிரிந்து செல்ல முஸ்தீபு



(வவுனியா)

ஐந்து தமிழ்க் கட்சிகள் இணைந்து உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து பிளவுறும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனிக்கட்சியாகப் பதிவு செய்வதில் ஏற்பட்ட சர்ச்சை முற்றியதால் இப்போது பெரும் பிளவு நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஐந்து கட்சிகள் இணைந்த கூட்டமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி, தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய நான்கு கட்சிகளும் மாத்திரம் இணைந்து தனியான அரசியல் கட்சியாகப் பதிவை மேற்கொள்ள அந்த நான்கு கட்சிகளும் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் புளொட் ஆகிய நான்கு கட்சிகளுமே இந்தத் தீர்மானத்தை எடுக்க உத்தேசித்துள்ளன. இருப்பினும், இதற்கான இறுதித் தீர்மானம் தமிழரசுக் கட்சியின் முடிவைப் பொறுத்தே அமையும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ முக்கியஸ்தருமான வினோநோகதாரலிங்கம் தெரிவித்தார்.

தனித்தனியாக இனிச்செல்ல முடியாது என்பதனால் நாம் இறுதியாக நான்கு கட்சிகள் கூடிப் பதிவு செய்யலாமா என்பது தொடர்பாகவும், அது சாத்தியமானால் பதிவை மேற்கொள்வது தொடர்பிலும் அல்லது வேறு எவ்வாறு கட்சிகளின் நடவடிக்கைகளை முன்ன

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் மனித உரிமை மீறல் சீன ஆயுத விநியோகமே காரணம்
### மன்னிப்புச் சபையின் பிந்திய கண்டுபிடிப்பு

கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான இலங்கைத்தீவில் நடந்தேறிய யுத்தத்தில் ஏற்பட்ட மனித இழப்புக்களுக்கும் பாரிய மனித உரிமை மீறல்களுக்கும் பிரதான காரணியாக சீனா மற்றும் பாகிஸ்தானின் ஆயுத வழங்கல்களே பிரதான காரணமாக அமைந்திருந்ததென சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச அளவில் ஆயுதங்களின் விற்பனையினை கட்டுப்படுத்துதல் மற்றும் இதன் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல் தொடர்பிலான புதிய அறிக்கையொன்றிலேயே இக்கருத்தினை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் பல்லாயிரக் கணக்கான பொதுமக்களின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்காவிடம் மண்டியிட்டால் தமிழர்களின் பிரச்சினை தீருமா?
### கூட்டமைப்பை சாடுகிறார் சம்பிக்க

(கொழும்பு)

அமெரிக்காவிடம் மண்டியிட்டு தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று கூட்டமைப்பு நினைப்பது மகாதவறு என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துரோகமிழைக்கவே ஜெனிவா சென்றுள்ளது. எனவே கூட்டமைப்பின் மீது ... நடவடிக்கை எடுக்க

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழில் சத்துணவுத் திட்டம்; உலக வங்கி நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஐந்து ...தேச செயலர் பிரிவுகளில் போசாக்குக் குறைந்த குழந்தைகளுக்கும், கர்ப்பவதிகளுக்கும் 'போஷா' என்னும் பொதியிடப்பட்ட மாக்கலவை வழங்கப்பட்டு வருவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலகவங்கி மற்றும் ஜப்பானிய அரசாங்கத்தின் கீழ் பொதி செய்யப்பட்டு இந்தப் போசாக்கு மாக்கலவை

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலைக்கழகம் விழாக்கோலம்; பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சிவசூரிய தலைமையில் காலை 9.00 மணியளவில் இவ் விழா ஆரம்பமானது.

மங்கள வாத்தியங்கள் சகிதம் வேந்தர், துணைவேந்தர், விரிவுரையாளர்கள் என்போர் இராமநாதன் அக்கடமிக்கு முன்பாகவிருந்து கைலாசபதி கலையரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# உள்ளூர் உற்பத்திப்பொருட்களை தீவகத்தில் விற்பனை செய்ய ஏற்பாடு

தீவகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான நிலையம் மற்றும் சிற்றுண்டிச்சாலை கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 26ஆம் திகதி நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளரும், ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு பிரதேச இணைப் பாளருமான தானியல் றெக்சியன்(றஜீவ்) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

மாகாணங்களுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 53 இலட்சம் ரூபா செலவில் இவ விற்பனை நிலையம் நெடுந்தீவு துறைமுகப்பகுதியில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது நெடுந்தீவுப்பிரதேச செயலர் சிறி, ஈ.பி.டி.பியின் புங்குடுதீவு பிரதேச இணைப்பாளர் ஐயாக்கிளி சிவநேசன்(நவம்), அருட்தந்தை தாவீது, நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்தலைவர் அரியநாயகம் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் நெடுந்தீவு பிரதேச இணைப்பாளர் அருந்தவசீலன் ஆகியோர் உடனிருந்தனர்.

# புதிய நிர்வாகம் தெரிவு




யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு யாழ்.ப.நோ.கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சிகை ஒப்பனையாளர் சங்கத் தலைவர் அ.அல்பேட் தலைமையில் நடபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி ஜீவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இதன்போது, யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு சங்கத்திற்கான நிர்வாகத் தெரிவுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, அச்சுவேலி, தீவகம், சுன்னாகம் ஆகிய பிரதேசங்களில் உள்ள சிகை ஒப்பனை நிலைய உரிமையாளர்கள் கலந்துகொண்டிடிருந்ததுடன் இந்த நிகழ்வில் சிகரம் பணிப்பாளர் கோ.றூஷாங்கன் கலந்து கொண்டு தற்போதைய யாழ் மாவட்டத்தின் கல்விநிலை மற்றும் தொழில் கல்வி பற்றி சிகை ஒப்பனையாளர்களுக்கு தெழிவுபடுத்தினார

# வவுனியாவில் முதலுதவிப்பயிற்சி



வவுனியா மாவட்ட மக்களின் நன்மை கருதி பாடசாலை மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சி வகுப்பொன்று 211ஆவது படைப் பிரிவின் வவுனியா சிவில் நிர்வாக பிரதம இணைப்பாளர் கேணல் ஜே.எம்.ஜி.பி.தென்னக்கோனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் தமிழ்,முஸ்லிம்,சிங்கள மாணவர்கள் பங்கு பற்றினர். இந்நிகழ்வை 211 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கேணல் சமந்த சில்வா அவர்கள் மங்கள விளக்கேற்றி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பதையும், இதில் கலந்து கொண்டவர்களாகிய சிவில் நிர்வாக பிரதம இணைப்பாளர் கேணல் ஜே.எம். ஜி.பி. தென்னக்கோன். வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட ஆணையாளர் திரு. செ.செல்வரஞ்சன், உதவி மாவட்ட ஆணையாளர் திரு.சோ.ஈழநேசன், சென்ஜோன் அம்புலன்ஸ் கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் திரு.வே.ஸ்ரீதரன், சென்ஜோன் அம்புலன்ஸ் தேசிய தலைமையக உதவிஆணையாளர் திரு. நந்தகுமார மற்றும் இதில் பங்கு பற்றிய ஏனைய உத்தியோகத்தர்களும், பயிற்சியில் பங்கு பற்றினர். (137)

# பிரதேசசபைக் கூட்டத்தில் குழப்பம்: எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

(மானிப்பாய்)

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் பெப்ரவரி மாதக் கூட்டம் நேற்று முன்தினம் 27.2.2013 இல் ஆரம்பமாகியது. தொடர்ந்து நேற்று வரை 28.2.2013இல் நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் குழுக்கள் அமைக்கும் வண்ணம் எதிர்க் கட்சி உறுப்பினர் எஸ். ஜே.செல்வராஜாவால் கொண்டுவரப் பட்ட பிரேரணையின் பிரகாரம் சபையின் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆறுக்குமான ஆறு குழுக்களும், அதனைக்கண்கா ணிப்பு மீளாய்வு செய்யும் அனுமதியுடன் நிதிக்குழு மற்றும் ஆளணிக்குழுவுமாக மொத்தம் எட்டுக் குழுக்கள் அமைத்து நிர்வாக பரவலாக்கல் மூலம் செயற்பாடுகளை விரிவுபடுத்தப்பட்டது.

இப்பிரேரணையை தவிசாளர் வாக்கெடுப்புக்கு விட்டு, முடிவு தேடாமல் தானே எதிர்ப்புத் தெரிவித்ததோடு, செயலாளரைச் சபைநெறியாள்கைக்குள் சம்பந்தப்படுத்தி பிரேரணையை புறக்கணித்தமையால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர் அதை ஆதரித்து ஆளும்கட்சி உறுப்பினர்கள் எட்டுப்பேர் வெளிநடப்பு செய்தனர். இதனால் தேவையான அளவு கோரமின்றி மாதாந்தக் கூட்டம் குலைந்தது.

# பட்டிமண்டபப் போட்டி

(யாழ்.நிருபர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகம் நல்லூர் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே பட்டி மண்டபப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தமது பாடசாலை அதிபர் ஊடாக இம்மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னதாக நல்லூர் பிரதேச செயலகத்தில் உள்ள மகளிர் அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு பாடசாலையில் இருந்து 3 பேர்மட்டுமே பங்குபற்ற முடியும். போட்டித் தலைப்பு பெண்கள் சார்ந்ததாக அமைந்திருக்கும். (10)

முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



ஆனந்தகிருஸ்ணன் விதுன்
இராச வீதி, கோப்பாய் வடக்கு கோப்பாய்.
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
அகவை 01 இல்


# ஆலவட்டம் பிடிக்க மறுப்பு; கல்விசாரா ஊழியர்கள் அடம்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

கொடி, குடை, ஆலவட்டமின்றி யாழ்.பல்கலைக் கழகத்தின் 28ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது.

துணைவேந்தர் போன்ற கல்விமான்கள் கௌரவமான முறையில் ஒவ்வொரு பொதுப் பட்டமளிப்பு விழாவின் போதும் இராமநாதன் அக்கடமிக்கு முன்பாகவிருந்து கைலாசபதி கலையரங்கு வரை மேளவாத்தியங்களுடன் கொடி, குடை, ஆலவட்டம் சகிதம் அழைத்து வரப்படுவது வழமையே. ஆனால் நேற்று நடைபெற்ற 28ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின்போது வழமைக்கு மாறாக கொடி, குடை, ஆலவட்டமின்றி வேந்தர், துணைவேந்தர் எல்லோரும் தனியே மேளவாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டிருந்தனர். இவற்றை ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளும் கல்விசார ஊழி யர்கள் அதை மேற்கொள்ள மறுத்து விட்டதாகவும், தமது கடமை அதுவல்ல என்றும் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர் தொழிற்சங்கத்தினருக்கும், பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் இடையிலான சில முறுகல் நிலைமையாலேயே இவ்வாறு இம்முறை கொடி, குடை, ஆலவட்டம் பிடிக்க கல்விசாரா ஊழியர்கள் முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ)





தொண்டை மானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டு பேரவை நடாத்திய வாசகர் போட்டியில் பங்குபற்றி பரிசில் பெற்றவர்களையும் இவர்களுக்கான பரிசில்களை எஸ்.சுமன சிறி (இலங்கை வங்கி பிரதிப் பொது முகாமையாளர்)வழங்கி நிற்பதையும் மற்றும் இலங்கை வங்கி ஊழியர்களையும் மற்றும் இளம் கலைஞர்மன்றத்தலைவர் பரமேஸ்வரன் தேவாரம் பண்ணிசைப்பதையும் காணலாம். (116)

## உறவினரிடையே கைகலப்பு; அறுவர் வைத்தியசாலையில்

(வடமராட்சி)

நெல்லியடிப் பிரதேசத்தில் உறவினர்களான வாத்தியக் கலைஞர்களிடையே ஏற்பட்ட கைகலப்புக் காரணமாக அறுவர் காயமடைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆண்டாவளவு - கரவெட்டி வடக்கைச் சேர்ந்த தம்பு செல்வரத்தினம் (வயது - 65), செல்வக்குமார் (வயது - 21), அத்தியன் நகுலன் (வயது - 23) ஆகியோரும் இராஜகிராமம் கரவெட்டியைச் சேர்ந்த சிவசோதி கமலேஸ்வரன் (வயது - 19), சிவசோதி சிவலோகநாதன் (வயது - 20), கந்தசாமி சிவசோதி (வயது - 48) ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவார்.

நெல்லியடிப் பகுதியில் உள்ள வங்கி ஒன்றிலிருந்து சிவசோதி சிவலோகநாதன் என்பவர் பணத்தை மீளப்பெற்றுக் கொண்டு வரும் வழியில் தனிப்பட்ட பிணக்குக் காரணமாக மோதல் ஏற்பட்டதாகவும் இதன்போது இவர் கொண்டு வந்த பணமும், 2 பவுண் தங்கச்சங்கிலியும் காணாமற் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இவர்களது உறவினர்கள் கை கலப்பிலும், வாள்வெட்டிலும் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (116)

## சமூகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த முன்னுரிமை வழங்க வேண்டும்

### – யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு –

(யாழ்.நிருபர்)

மாற்று வலுவுள்ளோர் சமூகத்தில் மதிக்கப்பட்டவேண்டியவர்கள். அவர்களது தேவைகளை இனம்கண்டு அவற்றைப் பூர்த்தி செய்து கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் கல்வி கற்ற சமூகம் இவர்களைக் குருடர், செவிடர் என்றும், இவர்களது பாடசாலையைக் குருடர, செவிடர் பாடசாலை என்றும் அழைத்து வந்தமை துன்பகரமான நிலையாகும்.

இன்று இந்த நிலை மாறி மாற்றுத் திறனாளிகள் என்று அரசாங்கம் இவர்களைக் கௌரவித்துள்ளது என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளனம் நடத்திய சாதனையாளர் கௌரவிப்பும், பயனாளிகள் நலன்பேண் நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கோண்டாவில் சேவாலங்கா மண்டபத்தில் க.காந்தராசா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில்,

மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கு வசதியாக அரசாங்கம் சமூக சேவைகள் அமைச்சினை உருவாக்கியுள்ளது.

இதன் செயலாளராக முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கடமையாற்றுகின்றார். அவர் மூலமாக மாற்றுத் திறனாளிகள் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியும்.

இங்குள்ள மாற்றுத் திறனாளிகளில் ஒருவர் விவாதப் போட்டியில் வென்று ஐ.நா. வரை கால் பதித்து யாழ்ப்பாணத் தமிழரின் பெருமையைப் பறைசாற்றியுள்ளார். இன்னொருவர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறும் மற்றவர் விளையாட்டுத் துறையில் சாதனைகளையும் படைத்துள்ளனர். இவர்களுடைய சாதனைகளை வாழ்த்தி வணங்குகிறேன்.

யாழ்ப்பாணத்தில் பொதுக் கூட்டங்கள் அமைக்கும் போது மாற்றுத் திறனாளிகள் தங்கி ஓய்வெடுக்கும் அறைகளுடன் கூடியதாக எதிர்காலத்தில் கட்டடங்கள் அமைக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். (10,137)

## "கவிதா ஆற்றல்" போட்டியில் யாழ்.பல்கலையில் 18 பேர் வெற்றி

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி அமைச்சினால் 2012 ஆம் ஆண்டில் கொழும்பில் நடாத்தப்பட்ட 'கவிதா ஆற்றல்' போட்டியில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 18 மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

இலங்கைப் பல்கலைக் கழகங்கள் தொழில் நுட்பக் கல்லூரிகள், உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் கல்வி பயிலும் மாணவர்களின் பன்முக ஆளுமைகளை வெளிக் கொண்டுவரும் வகையில் உயர் கல்வி அமைச்சு 2012 ஆம் ஆண்டில் கவிதா ஆற்றல் போட்டியினை நடாத்தியது.

இதில் பங்குபற்றிய யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 25 பேர் இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 18 மாணவர்கள் வெற்றி பெற்றிருப்பதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அனைத்து மாணவர்களுக்கும் பல்வேறு கட்டங்களாக இந்தப் போட்டிகள் நடாத்தப்பட்டிருந்தது. கடநத 21 ஆம் திகதி கொழும்பு நெலும்பொகுண மகிந்த ராஜபக்ஷ கலையரங்கில் நடைபெற்ற நிகழ்வில், வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பணப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு,

க.பரணிதரன் 1 ஆம் இடம் (சிறுகதை), நிசாந்தரணி 1 ஆம் இடம் (நடனம்), சிவதர்சிகா 1 ஆம் இடம் (நாட்டுப்புறப் பாடல),

சாரிதா 2 ஆம் இடம் (மெல்லிசை), தில்லிபவீனா 2 ஆம் இடம் (தொலைக்காட்சி அறிவிப்பாளர்), யோகராசா 2 ஆம் இடம் (மெல்லிசை) வித்தியா 2 ஆம் இடம் (கவிதை), கிறிஸ்ரிராஜ் 2 ஆம் இடம் (பாடலுருவாக்கம்).

சுவீகரன் 3 ஆம் இடம் (குறுந் திரைப்படம்), சுகிர்தினி 3 ஆம் இடம் (கவிதை), ஜெயப்பிரதா 3 ஆம் இடம் (மெல்லிசை), விஜயகுமாரி 3 ஆம் இடம் (நாட்டுப்புறப்பாடல்), விஜயகுமார் 3 ஆம் இடம் (வானொலி அறிவிப்பாளர்),

கஜேந்திரன் - சான்றிதழ் (ஓவியம்), புஸ்பகாந்தன் - சான்றிதழ் (ஓவியம்), சர்மிளா - சான்றிதழ் (ஓவியம்), கார்மெல் ஜோசப் - சான்றிதழ் (ஓவியம்), அகிலன் - சான்றிதழ் (மிருதங்கம்).

இந்நிகழ்வில் 1 ஆம் இடத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசிலும், கேடயமும், சான்றிதழும் இரண்டாம் இடத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு 75,000 ரூபா பணப்பரிசிலும், சான்றிதழும், மூன்றாம் இடத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு 50,000 ரூபா பணப்பரிசிலும், சான்றிதழும் வழங்கப்பட்டன. (பா)

## இஸ்லாமிய வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர (உயர்தர) வகுப்பிற்கு இஸ்லாம் பாட வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படடுள்ளன.

இஸ்லாம் பாடத்தை தெரிவு செய்த மாணவர்களுக்கு இந்தப் பாடத்தைக் கற்பிப்பதற்கு கடந்த ஒரு வருடமாக தகுதிவாய்ந்த இஸ்லாம் பாட ஆசிரியர்கள் இல்லை.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி, ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களை இணைத்து மாலை நேர மேலதிக வகுப்பாக ஆசிரியர் எம்.எஸ்.ஏ.எம்.முபாறக் இஸ்லாம் பாட வகுப்பை ஆரம்பித்துள்ளார். (105)

## இன்று நடைபெறும்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் இன்றையதினம் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றையதினம் நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமே ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற புதிய கட்டடத் திறப்புவிழா

வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற புதிய பணிமனைக் கட்டடத் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தவிசாளர் நடராஜா அனந்தராஜ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினரர்களாக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வஸ்திரி அலென்ரின், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மரியசீலன் ஜெசூ, பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன், கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## செல்வச் சந்நிதியில் ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி இன்றையதினம் காலை 10.30 மணிக்கு 'கீதை காட்டும் பாதை' என்னும் தலைப்பில் ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் சொற்பொழிவாற்றுவார்.



முழங்காவில் கிருஷ்ணர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு ஆலயப் பரிபாலனசபையின் ஏற்பாட்டில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இதில் ரிஷி தொண்டுநாத சுவாமிகளின் அம்மா மாணவிக்கு துவிச்சக்கர வண்டியை கையளிப்பதையும், மாணவர்களுடன் சுவாமிகளின் அம்மா சுவாமி அகியோர் நிற்பதையும் காணலாம். (09)

சினத்தை விட்டவன் நாளும் துன்பப்படுவதில்லை. பேராசையை விட்டவன் பேரின்பம் அடைவான். - *சிவானந்தர்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.thinamurasu.net**

## விதைப்பதே விளையும்!

இவ்வளவு தூரம் வளர்ச்சிபெற்று வந்துவிட்ட இனப்பிரச்சினைக்கு தீர்வு எப்படி வரும் என்பதற்கு நம்மிடையே உள்ள பதில்களை இரண்டு பிரதான பிரிவுகளாக வகுத்துக் கொள்ளலாம். ஒன்று, வெளிநாடுகள் ஆலோசனைகளை வழங்கலாம் அனுசரணை வழங்கலாம் ஆனால் உள்நாட்டுக்குள் சம்பந்தப்பட்ட தரப்புகள்தான் இதைப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பது.

இரண்டாவது, உள்நாட்டுக்குள் இதைத் தீர்த்துக்கொள்ளக் கூடிய சூழல் முற்றாக சிதைந்துவிட்டது. சமூகங்கள் ஒன்றையொன்று நம்ப முடியாதவாறு துருவப்படுத்தப்பட்டு விட்டன. வெளித்தரப்பின் தலையிடல்தான் எமது பிரச்சினையைத் தீர்த்துவைக்க முடியும் என்கிற பார்வை. தமிழ் மக்களின் குரலாகச் சொல்லப்படுகிற பெரும்பாலான தலைவர்களும் ஊடகங்களும் இந்தப் பார்வையைத்தான் வலியுறுத்தி வருவதையும், வெளித்தரப்பு தலையிடும் அந்த நாள் கனிவதற்குக் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதையே ஒரே பற்றுக்கோடாய் மக்களுக்குத் தந்துவருவதையும் நாம் காணலாம்.

வெளிநாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் கொடுப்பதன் நோக்கம் என்ன? தமிழ்மக்களுக்கான தீர்வைக் காண்பதே அந்த நாடுகளின் முடிவான அக்கறை என்று நம்பிக்கை கொள்வதற்கு ஆதாரங்களைத் தேடமுடியுமா? என்பது பற்றியெல்லாம் பல அரசியல் ஆய்வாளர்களும் வரலாற்று முன்உதாரணங்களோடு விளக்கி எழுதிவருகிறார்கள், நாம் அதற்குள் செல்லவேண்டாம்.

உள்நாட்டுக்குள்ளேயே நாம் பேசித் தீர்த்துக்கொள்வதில் நம்பிக்கையற்றுப்போக நாம் வைத்திருக்கும் காரணங்கள் எவையென்று பார்க்கலாம். சிங்கள மக்களிடம் பேரினவாதத்தை ஊட்டியே பதவிக்கு வரும் அரசுகள் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஒருபோதும் தீர்த்துவைக்க முடியாது. அதுபோல் இனவாதச் சேற்றுக்குள் அமிழ்த்தப்பட்ட சிங்கள மக்களும் தமிழ்மக்களுக்கான அரசியலுரிமைகளை விட்டுத்தருவதற்கு ஒருநாளும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. இவைதான் சொல்லப்படும் பிரதான காரணங்கள்.

இது மனிதர்களிடமும் மனிதத்திடமும் நம்பிக்கை கொள்ளமுடியாத விரக்தி மனப்பான்மையில் இருந்து வருவதாகத்தான் இருக்க முடியும். சகமனிதர்கள் என்போரிடம் நமது நியாயங்களைப் புரியவைக்க முடியவில்லை என்றால் அதில் நமது குறைபாடுகளும் தானே இருக்க வேண்டும். நம்மிடமுள்ள இனத்தனித்துவ–மேன்மை எண்ணங்களும், மற்றவர்கள் என்போரிடம் நெருங்க முடியாத விலகல் மனப்பான்மையும் கூட காரணங்களாக இருக்க முடியும்.

நம்மைவிட சிறுபான்மையினராக உள்ள இனக்குழுக்களிடம் நம்மால் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதும், அவர்களைச் சகிக்க முடியாத போக்குகளை நாம் வெளிக்காட்டியிருப்பதும், இன்றும் அவர்கள் நம்மை நம்பி நம்முடன் நெருங்கிச் செயற்பட முடியாதவாறுதான் நாமிருக்கிறோம் என்பதும் ஊன்றி யோசிப்பவர்களுக்கு எங்கள் தன்மையை வெளிப்படுத்தும். ஒப்பீட்டளவில் சிங்கள மக்களிடம் இருக்கும் சகிப்புத்தன்மை அளவையும்விட குறைவான சகிப்புத்தன்மைகளையே நாம் கொண்டுள்ளோம் என்பதையும் விளங்கிக்கொள்வது கஷ்டமல்ல.

அவர்கள் சமஷ்டியைக்கூடத் தரத் தயாராயிருந்தார்கள் என்பதும், அதையெல்லாம் அவர்கள் முகத்திலேயே விட்டெறிந்துவிட்டு வீரம் பேசியவர்கள் நாங்கள் என்பதும் இரகசியமாய் மறைத்துவிடக் கூடியவைதானா? தமிழர்களுக்குப் பிரச்சினை இருக்கிறது, உரிய அதிகாரங்களைப் பகிர்ந்து அது தீர்க்கப்பட வேண்டும் என்று சிங்கள மக்களிடம் சொல்லியே பதவிக்கு வரவில்லையா சந்திரிகா குமாரதுங்க அவர்கள்?

நாங்கள் பேசவே முடியாத காட்டுமிராண்டிகள் என்பது போல சிங்கள மக்களைச் சித்தரிப்பது எவ்வளவு அநியாயம்? தேவை என்னவென்றால், இந்த நாட்டின் சகோதர இனமக்களுடன் பேசி, தீர்வைக் காணமுடியும் என்று சொல்கிறவர்களை தமிழ்மக்கள் தங்கள் பிரதிநிதிகளாகக் காண்பிக்க வேண்டும். அப்போது நம்மை விடப் பெருந்தன்மையை சிங்கள மக்கள் காட்டுவார்கள் என்பதை நாம் காணமுடியும்.

\- ஆசிரியர்

# அதிபர்களுக்கு இராணுவப்பயிற்சி
# ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு

பாடசாலை அதிபர்களுக்கு படைப் பயிற்சி வழங்கி இராணுவ நிலையிலான தரங்களை வழங்கும் நடைமுறைக்கு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

பாடசாலைகளில் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுகளை பேணும் வகையிலேயே இந்த நடவடிக்கை என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தாலும், இதனை தாம் பாடசாலை நிர்வாகத்தில் இராணுவத் தலையீடாகவே கருதுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

நாட்டிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் 9000 அதிபர்கள் சேவையிலுள்ளார்கள் இவர்களில் சுமார் 4000 அதிபர்கள் எதிர்வரும் 4ஆம் திகதி தொடக்கம் படைஅணிப் பயிற்சி தலைமையகத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பயிற்சியின் பின்னர் லெப்டினன்ட், மேஜர் மற்றும் இராணுவ நிலையிலான தரங்கள் வழங்கப்படுவது பாடசாலை நிர்வாகத்தில் இராணுவ தலையீடு என்பதுடன் பாடசாலை முறைமையின் சுதந்திரத்திற்கும் பாரிய அடி என்று கூறுகின்றார்.

ஏற்கனவே தலைநகர் கொழும்பிலுள்ள முன்னணி பாடசாலை அதிபர்கள் 23 பேர் இந்தப் பயிற்சி பெற்று சீருடையில் லெப்டினனட் தர இராணுவ நிலையுடன் கடமையாற்றுகின்றார்கள்

வடக்கு, கிழக்கில் இராணுவ மயமாக்கலை நீக்கி இயல்பு நிலையை ஏற்படுத்துமாறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டு வரும் இவ்வேளையில் அதிபர்களை இராணுவ சேவையுடன் தொடர்புபடுத்தும் இந்த நடவடிக்கையானது முழு நாட்டையும் இராணுவ மயமாக்கும் செயலாகவே கருத வேண்டியுள்ளது 'என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டது மருத்துவர் சிவசங்கரின் அறிக்கை

### வழக்கு 13ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் இரத்தவங்கியின் பொறுப்பதிகாரி இரட்ணசிங்கம் சிவசங்கரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த வழக்கு விசாரணை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ரிஷ்வான் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே நீதிமன்றத்தில் பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவித்தனர். இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வைத்தியரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் ஆஜராகியிருந்தார். கைதுசெய்யப்பட்டு அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வைத்திய கலாநிதி இரட்ணசிங்கம் சிவசங்கரின் வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதிலும் வழக்கு விசாரணை எதிர்வரும் 13 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. கொக்காவில் இராணுவ முகாமிற்குள் அத்துமீறி உள்நுழைந்தார் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களைக் கொண்டு சென்றார் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்திய கலாநிதி இரட்ணசிங்கம் சிவசங்கர் 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார்.

கொக்காவில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட அவர் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸார் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டதை அடுத்து அவர் அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

25 வருடங்களாக வைத்தியத்துறையில் பணியாற்றிவரும் வைத்தியகலாநிதி இ.சிவசங்கர் யாழ். வைத்தியசாலையில் பணியாற்றி வந்தார்.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் இரத்தவங்கி பொறுப்பதிகாரியாக அவர் கடமையேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் புதிய புவியியல் படம் ஏப்ரல் மாதம் வெளியிடப்படும்

இலங்கையில் பூகோள முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை உள்ளடக்கி புதிய இலங்கை புவியியல் வரைபடம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளதாக பூகோள மற்றும் அகழ்வாராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பிலான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பூகோள மற்றும் அகழ்வாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் கலாநிதி என்.பி.விஜயானந்த தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பூகோள முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் குறித்து விரைவில் தகவல் அறியும் வகையில் புதிய புவியியல் வரைபடம் தயாரிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். இலங்கை வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து இந்த புவியியல் வரைபடம் தயாரிக்கப்படுகிறது. எதிர்வரும் ஏப்ரல் மாத ஆரம்பத்தில் குறித்த இலங்கை புவியியல் வரைபடம் வெளியிடப்படும் என என்.பி.விஜயானந்த கூறினார்.

## போதைப்பொருள் பாவனையால் பாதிப்பு புனர்வாழ்வு அளிக்க புதிய சட்டம்

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான புதிய சட்டங்களை உருவாக்க சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தீர்மானித்துள்ளது. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை சிறைக்கு அனுப்பாது புனர்வாழ்வளிப்பதற்கான புதிய சட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜி.எஸ்.விதானகே தெரிவித்தார். இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்றத்தின் மூலம் அவர்களை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்புவதற்கு புதிய சட்டங்களின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக 250 சந்தேகநபர்கள் அடையாளங்காணப்பட்டு வவுனியா புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

# பாவனைக்கு உதவாத பொருட்கள்; வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

(வவுனியா)


வவுனியா பிரதேசத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது பாவனைக்கு உதவாத பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த வர்த்தகர்களுக்கு எதிராக வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

ஓமந்தை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 4 உணவகங்களுக்கு எதிராகவும் வவுனியா நவீன பொதுச்சந்தையில் பழ வியாபாரம் செய்பவருக்கு எதிராகவும் இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன், வவுனியா பிரதேசத்தில் விற்பனைக்காக உப்பு பைக்கற்றுக்கள் அனைத்தும் நகரசபையின் சுகாதார பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, தாண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்று நேற்றுக் காலை நீதிமன்ற உத்தரவின் பேரில் சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் பஸார் வீதியில் அமைந்துள்ள வெதுப்பகம் ஒன்றினை புனரமைப்புச் செய்த பினனர் திறக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர்கள மேலும் தெரிவித்தனர்.

# பொறாமை எனும் விஷம்






**கொட்ஸ் ஆலி - தமிழில்: ரஞ்சன்**

**1808** முதல் 1812ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட ப்ரஷ்ய (ஜேர்மனியின் முன்னாள் பெயர்) சீர்திருத்தங்கள் அனைத்து குடிமக்களுக்கும் வர்த்தகம் செய்யும் சுதந்திரத்தை வழங்கின. மேலும், நிலவுடைமை சார்ந்த அடிமை முறையை முடிவிற்கு கொண்டு வந்ததோடல்லாமல், எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல், யூதர்கள் காரணங்களின்றியும் தண்டிக்கப்படக் கூடும் என்று அதுவரை இருந்த நிலைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இருந்தும், யூதர்கள் சில அசாதாரண சந்தர்ப்பங்களில் மட்டுமே அரசாங்க ஊழியர்களாக நியமிக்கப்பட்டனர். அப்படியும் அவர்களால்என்றும் இராணுவத்தில் உயர் பதவிகளை அடைய முடியவில்லை. ஆனால், பெரும்பான்மை கிறிஸ்தவர்களைப் போலல்லாமல்,தங்களுக்குப் புதிதாய்க்கிடைத்த வாய்ப்புகளை யூதர்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டனர். அவர்கள் தங்களைத் தளைகளிலிருந்து அதிவேகமாக விடுவித்துக் கொண்டனர்.

பெரும்பான்மை கிறிஸ்தவ, கல்வியறிவற்ற சிறுவர்களைப் போலல்லாமல் யூதச் சிறுவர்கள் ஹீப்ரு மொழியை வாசிக்கவும் எழுதவும் கற்றிருந்தனர். இச்சிறுவர்களுக்கு அவர்களின் பெற்றோர்கள் செல்வம் செழிக்கும் சூழலை வழங்கவில்லை. மாறாக, அனைத்து வகையிலும் சிறந்த கல்விவாய்ப்பை அளித்தனர்.

வாசிப்பு, எழுத்து, கணிதம் போன்ற கலாசார திறமைகள் தங்கள் குழந்தைகளுக்கு கூடுதலாக எவ்வளவு சிறந்த வாய்ப்புகளை பெற்றுத்தரும் என்பதை யூத பெற்றோர்கள் தெளிவாக உணர்ந்திருந்தனர். ஆனால், கிறிஸ்தவ பெற்றோர்களும், சமயாச்சார்யார்களும், 20ஆம் நூற்றாண்டு வரையிலும் கூட 'படித்தால் கண் கெட்டுப் போய் விடும்' என்றே சொல்லிக் கொண்டிருந்தனர்.

இத்தகைய சூழலமைப்பு, கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்தில் மாபெரும் வேறுபாடுகளைத் தோற்றுவித்தது. 1869ஆம் ஆண்டு, பெர்லினின் ஆரம்பப் பள்ளிகள் மொத்த மாணவர்களில், 14.8 சதவீதத்தினர் யூத குடும்பத்தை சேர்ந்தவர்கள். 1886ஆம் ஆண்டு, யூத மாணவர்களில் 46.5 சதவிகிதத்தினர், ஆரம்ப கல்வியை அடுத்து மேற்படிப்பைத் தொடர்ந்தனர். 1901 ஆம் ஆண்டு இந்த சதவீதம் 56.3 ஆக அதிகரித்து விட்டது. கிறிஸ்தவ பள்ளி மாணவர்களை விட எட்டு மடங்கு அதிக அளவில் யூத மாணவர்கள் தங்கள் மத்திய மற்றும் மேல்நிலைக் கல்வியை நிறைவு செய்தனர். அதே போல், 1901ஆம் ஆண்டு, பெர்லினில் மேனிலைப் பள்ளிகளுக்கு சென்ற கிறிஸ்தவ மாணவிகளை விட யூத மாணவிகள் 11.5 சதவீதம் அதிகம்.

ஆரம்பப் பள்ளிகளில் யூதர்கள் அடைந்த வெற்றி பல்கலைக்கழகங்களிலும் தொடர்ந்தது. புருஷ்யாவின் மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாக இருந்த யூதர்கள்,1886/1887ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களின் மொத்த மாணவர்களில் கிட்டத்தட்ட பத்து சதவீதமாக இருந்தனர். யூதர்கள் கிறிஸ்தவர்களை விட முன்னரே பல்கலைக் கழகக் கல்வியைத் துவக்கி, அவர்களைவிட வேகமாகவே தங்கள் கல்வியை நிறைவு செய்தனர்.புள்ளியியலாளர்கள் இதை உறுதிசெய்கின்றனர் 'யூத மாணவர்கள் கிறிஸ்தவர்களை விட மேன்மையான திறன்கள் கொண்டவர்களாகவும், செய்யும் பணியில் ஆழ்ந்த கவனம் கொண்டவர்களாகவும் உள்ளனர் என்று பொதுவாகக் கருத முடியும்'

கல்வியில் யூதர்கள் முன்னேற்றமடைய வல்லுநர்கள் எத்தகைய காரணங்களைச் சொன்னாலும், யூதரல்லாதோர் வேற்றுமையை உணர்ந்தனர். யூதர்களுக்கு எதிராக மூர்க்கமாக செயல்பட்டனர். 1880ஆம் ஆண்டு தாராளவாதத்தை ஆதரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினரான Ludwig Bambeger யூதர்களின் 'அசாதாரண கல்வி தாகத்தை' குறித்தும், யூதர்களிடம் வெளிப்படையாகத் தெரியும் முன்னேற்றத்திற்கான அவசரம், இவற்றைக் கொண்டு இது நாள் வரை அவர்களுக்கு விலக்கப்பட்டிருந்த அனைத்தையும் யூதர்கள் கைப்பற்றுவதை சுட்டிக் காட்டி பேசிய அவர், தனது உரையை இப்படி முடித்தார் : 'சந்தேகமேயில்லாமல் யூதர்கள் மீதானவெறுப்பு மீண்டும் அதிகரிப்பதற்கான காரணங்கள் இவையே'.

கிறிஸ்தவர்களின்உறுதியான மாறாத மனநிலைக்கும், சூழலுக்கு தகுந்தவாறு மாறுபடும் யூதர்களின் இளகும் தன்மைக்கும் இருக்கும் வேறுபாடுதான் அறிவுதளத்தில் இருவருக்இருந்த ஏற்றத்தாழ்விற்கான காரணம் என்றும், இதுவே பொறாமையின் உந்துதலால் சமூகத்தில் பரவி வரும் சமகால யூத-எதிர்ப்பிற்கு காரணம் என்றும் கூறிய சமூகவியலாளர் வெர்னர் சோம்பர் (Werner Sombart),இந்த விஷயத்தை மையப்படுத்தி தன் ஆராய்ச்சியை தொடர்ந்தார். சராசரியாக யூதர்கள் 'நம்மை விட அதிக அறிவுடனும் துடிப்புடனும் இருக்கின்றனர்' என்று முடிவு செய்த அவர், தன்னுடைய இந்த முடிவின் மூலம் பல்கலைக்கழக ஆசிரிய பணிகளிலிருந்து யூதர்கள் விலக்கி வைக்கப்படுவதை நியாயப்படுத்தினார். வேலைக்கு விண்ணப்பிக்கும் இருவரில் அனைத்து வகையிலும் அறிவு குறைந்தஒருவரே எப்போதும் யூதரைக் காட்டிலும் பணி நியமனம் பெறுவது அறிவியலுக்கு நல்லதல்ல என்று அவர் எழுதினார். இருந்தாலும் அத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியமானவை என்பது அவரது கருத்தாக இருந்தது. இத்தகைய தடைகள் இல்லாவிட்டால், 'அனைத்து விரிவுரையாளர், பேராசிரியர் பதவிகளும் யூதர்களால் கைப்பற்றப்படும் என்று அவர் நம்பினார். இன அடிப்படையிலான யூத வெறுப்பு எங்கே துவங்குகிறது என்பது இப்போது தெளிவாகிறது.

சமூக ஜனநாயக கட்சியைச் சேர்ந்த கார்ல் காட்ஸ்கியின் முடிவானசொற்களில், 'யூதர்களின் அறிவாற்றலே பிரச்சினைக்குரிய காரணமாக இருக்கிறது'. 1915ஆம் ஆண்டு ஜோன் பொஸ்டர் பிரேசர் இது குறித்து கேலி செய்தார்: 'சுருள் முடியும் சோம்பல் அறிவும் கொண்ட வடக்கின் மைந்தர்களுக்கும் கரும் கண்களும் விழிப்பான அறிவாற்றலும் கொண்ட கிழக்கின் மக்களுக்கும் இடையில்' உள்ள போட்டி ஒருதலைபட்சமாக உள்ளதால் ஜேர்மானிய கல்வியாளர்கள் யூதர்களை விலக்கி வைக்கத் தங்களால் ஆன மட்டும் முயற்சி செய்கிறார்கள்.

அவர்களின் இக்குறைகள் அவர்களுக்கே சங்கடத்தைத் தந்தன. எனவே, இவற்றை இனக் கோட்பாட்டின்பின் மறைத்துக் கொள்வது எளிதாக இருந்தது இதற்கான ஒரு நல்ல உதாரணத்தை1890களில் குர்ட் முல்லர் என்ற ஒரு மாணவன் எழுதிய 'ஜேர்மன் மாணவர்கள்மத்தியில் யூத மதம்' என்ற துண்டறிக்கையிலிருந்து நாம் பெறமுடியும். தன் சக மாணவர்களிடம் இருந்த இரு விஷயங்களை அவன் விரும்பவில்லை : தங்கள் சக மதத்தவர்களுக்காக எதையும் செய்ய, 'தங்களையே தியாகம் செய்யும் அளவிற்கு'க்கூட, தயாராக இருப்பதும், தோல்வியடைந்த மாணவர்களின் சதவீதக் கணக்கின்படி 'ஜேர்மனிய மாணவர்களைப் போல் யூத மாணவர்கள் பெருமளவு தோல்வியடையவில்லை' என்பதும்தான் இவை. ஏன் இப்படி? என்ற கேள்விக்கு முல்லரிடம் பதிலிருந்தது. யூதர்கள் 'கடின உழைப்பாளிகளாகவும், கவனத்துடன் விடா முயற்சியுடன் செயல்படுவோராகவும்' இருந்ததை ஒப்புக் கொள்ளவேண்டுமென்றும், 'பைத்தியம் பிடித்தது போல் பாடங்களை வீட்டில் மனப்பாடம் செய்தனர்' என்றும் சொன்னார் அவர். 'பணப்பித்து கொண்ட எல்லா குழுக்களையும் போல' யூதர்கள் மிகக் குறைவாகவே உண்டனர். ஒரு பியர் கோப்பையை காலி செய்தவுடனேயே யூத மாணவன் தன் கல்வி குறித்து தேவைக்கதிகமாகவே பேசத் துவங்கிவிடுகிறான்! அவன் நிறுத்தாமல் பேசுகிறான்.அது அனைவரையும் கவர்கிறது. அவன் மிக வேகமாக கற்கிறான், ஆனால் ஆழமாக கற்பதில்லை. ஏன் அவன் ஆழமாக கற்கவேண்டும்? இப்படி படிப்பதன் மூலம் அவன் தேர்வுகளை குறிப்பிட்ட காலத்தில் தேற முடிகிறது. மேலும், ஜேர்மானியர்களுக்கு மற்றுமொரு யூத உயரதிகாரி கிடைத்துவிடுகிறான்...பிறகு அவர்கள் மருத்துவர்கள், வக்கீல்கள் மற்றும் விஞ்ஞானிகளாக மிக வேகமாக பணம் சம்பாதிக்கக் துவங்கி விடுகிறார்கள்!..அந்த துண்டறிக்கை இவ்வாறு முடிவடைகிறது : 'யூத மாணவர்களைக்காட்டிலும் உயர்ந்தவர்கள் என்ற பெருமையுடனும் எதிர்த்து நில்லுங்கள்!..ஜேர்மானிய இனப்பெருமை தாழ்வு மனப் பான்மையைக்கொண்டு ஊட்டிவளர்க்கப்பட்டது.

1922ஆம் ஆண்டு வில்ஹெல்ம் ஸ்டேபெல் (Wilhelm Stapel) "செமிதிய எதிர்ப்பு" (AntiSemitism) என்ற புத்தகத்தை வெளியிட்டார், அவர் அதில் இப்படி எழுதியிருந்தார். :

(17ஆம் பக்கம் பார்க்க)

**தனி மனிதனை அரித்துத் தின்னும் பொறாமையை, அவன் தனக்கும் பிறரிடத்தும் மறைக்கும்போது அது சக மனிதர்களிடம் பரவியிருக்கும் ஒரு கூட்டுக் கனவாகி, அவர்களை இன வாதத்திற்கு இட்டு சென்றது. தங்களை குறித்து தாங்களே மகிழ்ந்திராத ஒடுக்கப்பட்ட ஜேர்மனியர்களுக்கு இந்த இனவாதம் ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. இனவாதம் என்பது பலவீனத்தால் உந்தப்பட்டு மந்தைக்குள் சென்று சேர்வதன்றி வேறல்ல.**

# நல்லிணக்க நடவடிக்கைகளை தனிமைப்படுத்த வேண்டாம்

## அரசாங்கம் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில், இலங்கையின் நல்லிணகக நடவடிக்கைகளை ஊக்கப்படுத்த வேண்டுமேயன்றி தனிமைப்படுத்தக்கூடாது என ஜெனீவாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அலுவலக ஆலோசகர் பிரியங்கா விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


சர்வதேச அமைப்புக்கள் தொடர்பான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் எஸ்தர் பிரிம்மர், மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடரில் வெளியிட்ட கருத்திற்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் கூறினார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அனைத்து பிரஜைகளையும் இணைத்துக்கொண்ட தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றின் ஊடாக பூரண நல்லிணக்க நடவடிக்கையொன்று இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரமைகள் பேரவை முன் வைததுள்ள நியாயமற்ற நடவடிககைகளுக்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிடுகிறது.

இந்த நடவடிக்கைகள் மனித உரிமைகள் பேரவையின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானது. இவ்வாறான நடவடிக்கையொன்றின் ஊடாக இருவேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நவிப்பிள்ளை குற்றச்சாட்டு ஏற்கமாட்டாது ஐ.தே.கட்சி



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இழிவான குற்றச்சாட்டுக்கள் ஏற்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிராக இழிவான குற்றச்சாட்டுக்கள் சுமத்திய போதிலும், அதனை அரசியல் நலனுக்காக ஐக்கிய தேசியக் கட்சி பயன்படுத்திக் கொள்ளாது. ஒட்டுமொத்த நாடும் எதிர்நோக்கும் பாதகமான நிலைமையாகவே இந்த நிலையைக் கருதவேண்டும். போரின் பின்னர் பொற காலமொன்றை உருவாக்கக் கூடிய சாத்தியம் காணப்பட்டபோதிலும, ஆட்சியாளர்கள் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

தற்போதைய ஆட்சியாளர்களின் வெளியுறவுக் கொள்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது. தூரநோக்கற்ற வெளியுறவுக் கொள்கையினால் நாடு நெருக்கடியான நிலைமைகளை எதிர்நோக்கி வருகின்றது. சர்வதேச சமூகத்தை உதாசீனம் செய்யும் வகையில் அரசாங்கம் செயற்பட்டது என கரு ஜயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

# ஈரான் - இலங்கை உறவு அதிருப்தி அடையும் இஸ்ரேல்



(கொழும்பு)

ஈரானுடன் இலங்கை கொண்டுள்ள உறவு குறித்து இஸ்ரேல் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிய வெளியுறவுத் துறை அமைச்சரை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சந்தித்தபோதே இஸ்ரேலிய அமைச்சர் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சிறந்த உறவு உள்ளது.

இந்தநிலையில் இஸ்ரேல் சமாதானம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளது.

குறிப்பாக, ஈரான் சர்வதேச நியமங்களுக்கு மாறாக அணுவாயுதங்களை இராணுவத் தேவைக்காக பயன்படுத்துவது அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே அவ்வாறான ஈரானுடன் இலங்கை கொண்டுள்ள நெருக்கமான உறவு குறித்து தாம் அதிருப்தி கொள்வதாக இஸ்ரேலிய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் விசாரணை நடத்த சர்வதேசக் குழுவொன்று வரும்

## கூறுகிறார் பொன்சேகா



(கொழும்பு)

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு விசாரணை செய்யக் கூடுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அனுமதி பெற்றுக்கொள்ளாது, யுத்தத்தின் போது இடம்பெற்றதாக கூறப்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்தக் கூடிய வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சட்டதிட்டங்களில் மாற்றம் செய்யப்படக் கூடுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

விசா அனுமதியின்றி நேரடியாக விசாரணைக்குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் வகையில் தீர்மானமொன்றை நிறைவேற்ற முயற்சிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச குழுவொன்று இலங்கைக்கு நிச்சயம் விசாரணை நடாத்த வரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவர்கள் என்னிடம் கேள்வி எழுப்பமாட்டார்கள், யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து கேள்வி எழுப்புவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாளையுடன் ஓய்வு பெறுகிறார் எயார் சீவ் மார்ஷல் றொசான்

(கொழும்பு)

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி எயார்சீவ் மார்ஷல் றொசான் குணதிலக நாளையுடன் ஓய்வு பெறவுள்ளதாக, ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஓய்வுபெற்ற பின்னர் இவருக்கு விரைவில் இராஜதந்திரப் பதவி ஒன்று வழங்கப்படவுள்ளதாகவும் . கூறப்படுகிறது.

விமானப்படைத் தளபதி பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், கடந்த 2011 பெப்ரவரி 28 ஆம் நாள் இவர், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமிக்கப்பட்டார்.

இந்தப் பதவியில், ஒருவர் இரண்டு ஆண்டுகள் மட்டுமே வகிக்க முடியும்.

இதனால், எயார் சீவ் மார்ஷல் றொசான் குணதிலகவின் பதவிக்காலம் நாளையுடன் முடிவடைகிறது.

மேலும், இரண்டு ஆண்டுகள் பதவியை நீடிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

றொசான் குணதிலக 6 மா[illegible] சேவை நீடிப்புக் கோரியுள்ளதாக வதந்திகள் பரவியுள்ள போதிலும், அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படமாட்டாது என்று அறியப்படுகிறது.

இதற்கிடையே, விமானப் படையின் 13 ஆவது தளபதியாக பணியாற்றும் எயார் மார்ஷல் ஹர்ச அபேவிக்கிரமவும் விரைவில் ஓய்வுபெறவுள்ளதாகவும், பிரதித் தளபதியாக உள்ள எயார் வைஸ் மார்ஷல் கோலித குணதிலக அந்தப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# ஹலால் சான்றிதழ் அரசிடமா? திருப்தி இல்லை என்கிறார் ரணில்

(கொழும்பு)

ஹலால் சான்றிதழ் வழங்கும் பொறுப்பை அரசாங்கத்திடம் கையளிப்பது திருப்திகரமான நடவடிக்கை அல்ல என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சிங்கள - முஸ்லிம் மக்களிடையே உண்டான அமைதியின்மையைப் போக்குவதற்கு மேற்கொள்ள வேண்டியவை நிறையவே உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

'அல்லாஹ்' என்ற பெயர் எழுதப்பட்ட பன்றியின் படத்தை எடுத்துச் சென்ற சம்பவம் தொடர்பில் அரசாங்கம் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் அல்லது முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும எனவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்தப்படவில்லை என நாடாளுமன்ற அவைத்தலைவர் நிமல் சிறிபால டி சில்வா மறுத்தமை உண்மையல்ல என ரணில் விக்ரமசிங்க மீள வலியுறுத்தினார்.

சிங்கள - முஸ்லிம் மக்களிடையே உண்டான விரும்பத்தகாத பிரச்சினைகளை ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஹபீர் காசீம் தலைமையில் ஒரு குழுவை நியமித்துள்ளதாக தெரிவித்த அவர், இரண்டு வாரங்களில் அந்தக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றார்.

இந்தக் குழுவில் கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில், மாகாண சபை உறுப்பினர்களான முஜீபுர் ரஹ்மான், பைரூஸ் ஹாஜி மற்றும் எம்.என். நசீர் ஆகியோர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இதேவேளை, ஹலால் என்பதன் கருத்து சுத்தமானது என்பதாகும் என கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்தார்.

ஹலால் உணவை உண்பதனால் ஒரு பௌத்தர் முஸ்லிம் ஆகமாட்டார். அத்துடன் ஹலால் அல்லாத உணவை உண்பதால் ஒரு முஸ்லிம் பௌத்தராகமாட்டார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உணவுக்காக கொல்லப்படும் விலங்கை நோகடிக்ககூடாது என ஹலால் கற்பிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார.

# கொலைக் குற்றச்சாட்டு ஐவருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

நாகொட- வலகும்புறுகம பகுதியைச் சேர்ந்த 63 வயதான ஒருவரைக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 5 பேர் குற்றவாளிகளாகக் காணப்பட்ட நிலையில் அவர்களுக்கு காலி மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.கே.ஹிரிம்புறேகம மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

1998 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி இந்தக் கொலைச் சம்பவம் இடம் பெற்றிருந்தது.

இராணுவ உத்தியோகத்தர் ஒருவருக்கு சொந்தமான தோட்டத்திலிருந்து தேயிலைக் கொழுந்துகளை திருடியதை இட்டு ஏற்பட்ட தகராறின்போது பாதிக்கப்பட்டவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

முதலாவது, இரண்டாவது குற்றவாளிகள் இராணுவ வீரர்கள் ஆவர். 3 ஆவது 4 ஆவது குற்றவாளிகள் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்தவர்கள். குற்றஞ்சாட்டப்பட்ட வேறு இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.

# வெப்பமான காலநிலை

(கொழும்பு)

ஈரப்பதன் குறைவடைந்து வெப்பநிலை அதிகரித்து வருகின்றமையால் எதிர்வரும் நாட்களில் இலங்கையில் வெப்பமான காலநிலை நிலவும் என வளிமண்டலவியல்த் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல பகுதிகளில் வெப்பநிலை உயர்வடைந்து காணப்படுவதாகவும், ஆக கூடியதாக இரத்தினபுரியில் 34 பாகை செல்சியஸ வெப்பநிலை பதிவாகியுள்ளதாகவும் வளிமண்டலவியல்த் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பொய்யுள் -08



— மூலபாரதி

### மாற்று!

எங்கே போய்க்கொண்டிருக் குலகம்
ஏட்டுக் கல்வியை போதித்த லில்லா
அங்கே தொழில் பயிற்சி என்னும்
அலகதை புகுத்தி படிப்பிக் கின்றனர்!

எறிகணைக் கஞ்சி எடுத்த பொருளுடன்
எட்டிப் போனவர் இல்லங்கள் தம்மை
பறிபோகப் படையினர் பாத்திகள் போட்டு
பயிர்சோளப் பொத்திகள் வளர்ந்துவிட்டார்!

படிப்பு மில்லைப் படைக்குப் போட்டி
போட்டிட ஆளுமில் லையென் மாற்றி
குடியூர் வதுவோ கறையன் புற்றில்
குடிகொள் பாம்பாய் எல்லாம் பாழாம்

## முரசின் இன்றைய பலன்

(01.03.2013 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் மாசி மாதம் 17 ஆம் திகதி.
நட்சத்திரம் சித்திரை பின்னிரவு 1.29 வரை. திதி சதுர்தசி முன்னிரவு 11.03 வரை. இராகுகாலம் 10.57 - 12.27 வரை.
சுபநேரம் 6.37 - 07.57 வரை. கரிநாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சவால்களை ஏற்பீர்கள். புதிய யுக்திகளால் தொழில இடையூறு விலகும். கூடுதல் லாபம். கடன் தீரும். உறவினர்களால் குழப்பம். உடல்நலம் சீர்பெறும். |
| ரிஷபம் | முன்னர் செய்தவற்றின் நற்பலன் தேடி வரும். மனதில் புதிய நம்பிக்கை. தொழில் இடையூறு விலகும். அதிக ஆதாயம். |
| மிதுனம் | செயல்திறம். நண்பர், உறவினர் பாராட்டு. கூடுதல் மூலதனம். வளர்ச்சியும், பணவரவும் கூடும். மங்கல நிகழ்ச்சி. அரச உதவி கிடைக்கும். |
| கடகம் | புத்துணர்வும் செயல்களில் ஆர்வமும். தேங்கிய பணிகளை முடிப்பீர்கள். தொழிலில், புதிய பரிமாணம். வரவுக்கேற்ப அதிக குடும்பச்செலவு. |
| சிம்மம் | திறமைக்கு பாராட்டு கிடைக்கும். பிறரிடம் பரிவு. தொழில், வளர்ச்சி. உபரி பணவரவு. உடல்நலம் பலம்பெறும். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம். |
| கன்னி | இன்று எளிமையும் சாந்தமும். எதிர்பார்த்த நன்மை, வந்து சேரும். தொழில், இலக்கு நிறைவேறும். சராசரி பணவரவு. குடும்பத்தின் நிறைவேற்றுவீர்கள். |
| துலாம் | முரண்கள் ஏற்படும். பொறுமை சிக்கல் தவிர்க்கும். தொழில் நிலை சுமார். வரவை விட செலவு கூடும். இல்லறத்துணை உதவி. பழைய உறவு திடீர் வருகை. |
| விருச்சிகம் | மனதில் குழப்பம். பிறரால் தொந்தரவு. நிதானத்தால் அவப்பெயர் தவிர்க்கலாம். பணியில் அதிக அக்கறை. வரவை விட செலவு கூடும். |
| தனுசு | கோபமும் உணர்ச்சி வசப்படுதலும். நண்பர் துணை ஆறுதல். தொழில் சீராக முயற்சி துணை. பணவரவு சுமார். சேமிப்பு கை கொடுக்கும். புதிய அறிமுகம். |
| மகரம் | எதிர்பாரா உதவி ஒன்று, உறவினர் வழி வரும். மனதில் உற்சாகம். தொழில், வளர்ச்சி இலக்கு அடையும். ஆதாய வருமானம். |
| கும்பம் | வெற்றிக்கு ஆசிகள் கிடைக்கும். புதிய நம்பிக்கை வளரும். தொழிலில் கூடுதல் அக்கறை. பணவரவு திருப்தி. குடும்பத்தின் தேவை நிறைவேறும். |
| மீனம் | சவால்கள் தவிர்க்கவும். நிதானம் நன்மை. தொழில் தாமதம். வரவு மந்தம். உடல்நல கவனம் வேண்டும். அதிகாரிகளால் அலைகழிவு. |

# கிராம பாடசாலைகளை வளப்படுத்த பெற்றோர்கள் பங்காற்ற வேண்டும்

– வடமாகாண ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் –

பெற்றோர் தமது கிராமத்தில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்க முன்வர வேண்டும்.

நகர்ப்புறப் பாடசாலைகளை நாடுவதால் வீண் நேரவிரயம், போக்குவரத்துச் செலவு, சக்தி விரயம் மற்றும் துஷ்பிரயோகம் போன்ற நெருக்கடிகளுக்கு மாணவர்கள் ஆளாகின்றனர். இவற்றைத் தவிர்த்து தமது கிராமப் பாடசாலைகளை வளப்படுத்த பெற்றோர் முன்வர வேண்டும் என வடமாகாண ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.இராஜரட்ணம் தெரிவித்தார்.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் மற்றும் கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை ஆகியவை இணைந்து நடத்திய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நகர்ப்புறங்களை நாடிச் செல்லும் மாணவர்களுக்கு கிராமப்புற பாடசாலைகளில் தரமான கல்வி வழங்கும் நோக்குடன் மகிந்த சிந்தனைத் திட்டத்தின்கீழ் 1000 பாடசாலைகளில் பாடசாலைகள் அபிவிருத்தித்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உங்கள் பாடசாலையும் உள்வாங்கப்பட்டுள்ளதால் அண்மித்த ஊட்டப் பாடசாலையின் தரத்தினையும் உயர்த்தி தரமான கல்வியை வழங்கமுடியும்.

இந்த வகையில் இன்று இரண்டு பாடசாலைகளும் இணைந்து விளையாட்டுப் போட்டியை நடத்துவது பயனுள்ளதாகவும், ஏனைய பாடசாலைகளுக்கு முன்மாதிரியாகவும் அமைந்துள்ளது. மாணவர்கள் தினமும் காலையில் விளையாட்டு மைதானத்திற்குச் சென்று 15 நிமிடங்கள் உடற் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

பெரும்பாலான பெற்றோர் முதலாம் தரத்திலேயே தமது பிள்ளைகளை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பி அப்பிள்ளையின் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலை மழுங்கடிக்கச் செய்து விடுக்கின்றார்கள்.

போட்டி உலகில் எல்லோருக்கும் அரச உத்தியோகம் கிடைக்குமென எதிர்பாக்க முடியாது. எனவே பிள்ளைகளிடம் இலைமறைகாயாக மறைந்து கிடக்கும் ஆற்றல்கள், திறமைகளை வளர்ப்பதற்கு பாடசாலை ஆசிரியர்களுடன் பெற்றோரும் இணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவருமான அ.ரவீந்திரதாஸன், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (10)

## பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி நவபுரம் கல்விச் சமூகத்தின் ஒழுங்கமைப்பில் இலங்கை கல்வி நிர்வாக சேவை தேர்வில் வெற்றிபெற்று பதுளை மாவட்டத்தில் பண்டாரவளைக் கல்வி வலயத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளராகப் பதவியேற்றுள்ள சிவசம்பு மதியழகனுக்கான பாராட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைதடி நவபுரம் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கரன் தங்கராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக முனைவர் க.சச்சிதானந்தன், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவ பாலன், கிளிநொச்சி பாரதிபுரம் மகா வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் க.இராஜேந்திரன், பரந்தன் மக்கள் வங்கி முகாமையாளர் க.சிறீதரன், எருதிடல் அ.த.க. பாடசாலை அதிபர் ந. ஜெயரூபன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஞானச்சுடர் மலர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண் பாட்டுப்பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் மாசி மாத மலர் வெளிவந்துள்ளது.

இம்மலரில் வாரியார் சுவாமிகளின் கந்தரநுபூதி, மானிடப் பிறவி, நடைஉடையில் சைவம், திருமந்திரக்கதைகள், சிவராத்திரி போன்ற பல ஆன்மீக தகவல்கலை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது.



வடமாகாண பிராந்திய திட்டமிடல் தொடர்பாக உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தலைமையில் கொழும்பு பத்திரமுல்லையிலுள்ள ஆளுநர் உபஅலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்கள அதிகாரிகளுடன் ஆளுநர் கலந்துரையாடுவதைக்காணலாம்.

# முதுநிலை விரிவுரையாளர் பதவிக்கு பிரசாந்தன் தகுதியானவரென தீர்ப்பு

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்துறைக்கான விரிவுரையாளர் தெரிவில் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டதாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் ஸ்ரீ பிரசாந்தன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்றம், தமிழ்த்துறை முதுநிலை விரிவரையாளர் பதவிக்கு மனுதாரர் ஸ்ரீ பிரசாந்தனே பொருத்தமானவர் என கடந்த 13 ஆம் திகதி புதன் கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு உயர்நீதிமன்றில் நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தன, ஈவாவனசுந்தர, கெட்டிகே ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுதாரர் முதுநிலை விரிவுரையாளர் பதவிக்கு அவசியமான 6 வருட காலசேவை முன்னனுபவத்தைப் பெற்றிருந்தாரா என்ற கேள்வி எழுந்து.

அப்போது பல்கலைக்கழகம் சார்பில் ஆஜராகியிருந்த அரச சிரேஷ்ட சட்டத்தரணி, முதுநிலை விரிவுரையாளர் பதவிக்கு அவசியமான காலத்தில் 6 அல்லது 7 நாட்கள் குறைவடைந்திருந்ததாகக் கூறினார்.

எனினும், குறித்த பதவிக்கான விண்ணப்பமுடிவுத் திகதியன்று மனுதாரருக்கு வேண்டிய 6 வருட கால முன்னனுபவம் இருந்ததைச் சுட்டிக்காட்டிய மனுதாரரின் சட்டத்தரணிகளின் வாதத்தை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம், முன்னனுபவத்தை தேவையான அளவு மனுதாரர் கொண்டிருந்தார் என்றும், அவர் முதுநிலை விரிவுரையாளர் பதவிக்குப் பொருத்தமானவர் என்றும் தீர்ப்பளித்துள்ளது. (10)

# சிறப்பான நிலையை அடைய கடின உழைப்பு அவசியம்



(கொழும்பு)

இலங்கை வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பான நிலையை அடைவதற்கு கடினமான உழைப்புத் தேவைப்படுவதாக இலங்கை அணியின் புதிய வேகப்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளர் சமிந்த வாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் தனது முதலாவது பயிற்சியை முடித்துக் கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே சமிந்த வாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர்கள் அடிக்கடி காயமடைந்து வருகின்ற நிலையில், அதற்கு பந்து வீச்சாளர்களுக்கும், பயிற்றுவிப்பாளர்களுக்கும், உடற்கூற்று நிபுணருக்குமிடையிலான தொடர்பாடல் இல்லாமையே காரணம்.

வேகப்பந்து வீச்சாளருக்கு உபாதை அல்லது உபாதைக்குரிய அறிகுறிகள் காணப்பட்டால் அதை வெளிப்படுத்துமாறு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

வேகப்பந்து வீச்சாளர்களைச் சரியான முகாமை செய்வது தொடர்பாக பயிற்றுவிப்பாளர்கள், உடற்கூற்று நிபுணர்கள் மற்றும் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். வெளியிலிருந்து பார்க்கும்போது சில வீரர்கள் போதுமான அளவு கடின உழைப்பை வெளிப்படுத்துவதில்லை. பலர் குறுக்கு வழிகளைச் சிந்திக்கின்றனர்.

சிலர் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடி பணத்தை உழைத்து இலகுவான வழியில் செயற்பட எதிர்பார்க்கின்றனர். ஆனால் வெற்றி என்பதற்கு குறுக்கு வழிகள் கிடையாது எனவும் தெரிவித்தார்.

# புலி போன்ற ஆவேசம்



ஓட்டங்கள் சேர்க்க வேண்டும் என்பதில் சச்சினுக்குள், புலி போன்ற ஆவேசம் இருந்ததை கண்டேன். சிறிய உருவம். ஆனால் பெரிய போராட்டக்காரர் சச்சின் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரர் மத்தியூ ஹைடன் தெரிவித்துள்ளார். அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரர் ஹைடன். இவர், இந்திய அணியின் சச்சின் குறித்து, சச்சின்-கிரிக்கெட்டர் ஓப் தி செஞ்சரி என்ற புத்தகம் எழுதியுள்ளார். மார்ச் முதல் வாரத்தில் வெளியாகவுள்ள இதில், ஹைடன் குறிப்பிட்டிருப்பதாவது, கடந்த 1990ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சச்சின் குறித்து கேள்விப்பட்டேன். இவரின் உருவத்திற்கும், கிரிக்கெட்டில் படைத்த சாதனைகளுக்கும் சம்பந்தமில்லாதது போல இருக்கும். உருவத்தில் மிகவும் சிறியவரான சச்சின், கிரிக்கெட்டின் அடையாளமாக திகழ்கிறார். ஓட்டங்கள் சேர்க்க வேண்டும் என்பதில் இவருக்குள், புலி போன்ற ஆவேசம் இருந்ததை கண்டேன். சிறிய உருவம் ஆனால் பெரிய போராட்டக்காரர். 2008இல் எங்களுடைய மொகாலி டெஸ்ட் ஞாபகம் வருகிறது. டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் வரிசையில், சச்சின் முதலிடத்துக்கு முன்னேறியது இங்கு தான். மைதானத்தில் இருந்தவர்கள் பெரியளவில் இதை கொண்டாடினர். வாண வேடிக்கையில் அரங்கமே அதிர்ந்தது. இதனால் ஏற்பட்ட புகை மறையும் வரை, போட்டியையே 20 நிமிடம் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, புக்கானன் சச்சினைப் பாராட்டியுள்ளார். இதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது, சச்சின், பொண்டிங்கை விட அதிக சாதனைகள் நிகழ்த்தியுள்ளார். தவிர, சுழற்பந்துவீச்சை எதிர்கொள்வதில், சச்சின் தான் உண்மையில் பொண்டிங்கை விட சிறந்த வீரர். கிரிக்கெட் போட்டிகளில் இருந்து சிறிது ஓய்வு எடுத்து விட்டு, மீண்டும் ஆட்டத்திறனுடன் திரும்புவது சச்சினின் செயல் வியக்கத்தக்கது. இதனால தான இவரால இத்தனை ஆண்டு காலம் கிரிக்கெட்டில் நீடிக்க முடிகிறது. இதுபோன்ற குணங்கள் தான், கிரிக்கெட் ஜாம்பவான் பிரட்மனின், சாதனைகளை முந்த சச்சினுக்கு உதவியது எனத் தெரிவித்தார்.

# ருவென்ரி–20இற்கு முன்னுரிமை

(கொழும்பு)


ருவென்ரி-20 போட்டிகளுக்கே இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் முன்னுரிமை வழங்குகின்றன. அதன் காரணமாக இலங்கை, இந்திய அணிகள் டெஸ்ட் போட்டிகளில் தடுமாறி வருவது வெளிப்படுகின்றது என இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவிததுள்ளார்.

இலங்கை, இந்திய அணிகள் மட்டுப்படுத்தப் பட்ட ஓவர் போட்டிகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கி வருகின்றன. 50 ஓவர் போட்டிகளால் அதிகளவு தீமை கிடையாது. ஆனால், ருவென்ரி-20 போட்டிகளைப் பொறுத்த வரை அது வீரர்களின் கிரிக்கெட் தரத்தைக் குறைத்துவிடும்.

குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன போன்றோரே துடுப்பாட்ட நுட்பங்களில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இந்தியாவின் கௌதம் கம்பீர் அவ்வாறே துடுப்பாட்ட நுட்பத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்.

என்னுடைய காலத்தில் இந்திய அணியைத் தோற்கடிப்பது கடினமாகக்காணப்பட்டது. ராவிட், கங்குலி, டெண்டுல்கர், லக்ஷ்மன், வினோத் கம்ப்ளி, அஷாருதின் போன்றோர் சிறந்த நுட்பங்களுடன் காணப்பட்டனர். இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் என அனைத்து நாடுகளும் தங்களுக்கென ருவென்ரி-20 தொடர்களை நடாத்துவதில் கவனஞ் செலுத்தும் நிலையில், நாட்டிற்காகப் போட்டிகளில் பங்குபற்றுவது என்பதன் முக்கியத்துவம் குறைவடைந்து வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒலிம்பிக்கில் கிரிக்கெட்



(லண்டன்)

வரும் 2024 ஒலிம்பிக்கில் கிரிக்கெட் போட்டியை சேர்க்க முயற்சிகள் நடப்பதாக தெரிகிறது.

கடந்த 1900 பரிஸ் ஒலிம்பிக்கில் முதன் முறையாக கிரிக்கெட் இடம் பெற்றது. இதில் இங்கிலாந்து அணி, பிரான்ஸை வீழ்த்தி தங்கம் வென்றது. இதன் பின் கிரிக்கெட் நீக்கப்பட்டது. கடந்த 1998 கொமன்வெல்த் போட்டியில் மட்டும் கிரிக்கெட் இடம் பெற்றது.

ஒவ்வொரு ஒலிம்பிக் போட்டிகளில் ஏதாவது புதிய விளையாட்டுப் போட்டியைச் சேர்க்க முயற்சிகள் நடக்கும். இந்த வரிசையில் கிரிக்கெட்டையும் சேர்க்க வேண்டும் என கோரிக்கை எழுந்தது. இதை, கடந்த 2010இல் சர்வதேச ஒலிம்பிக் சபை (ஐ.ஓ.சி.) ஏற்றுக் கொண்டது. தவிர, ஐ.ஓ.சி.யின் தலைவர் ஜோக்ஸ் ரோகியும், 2011இல் வரவேற்பு தெரிவித்திருந்தார். இருப்பினும், இது கோரிக்கை அளவிலேயே இருந்து வருகிறது. இப்போது வரும் 2024 ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டைச் சேர்க்க வேண்டும் என, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) விண்ணப்பித்துள்ளது.

இதுகுறித்து மெர்ல்பேர்ன் கிரிக்கெட் கிளப் (எம்.சி.சி.) உலக கிரிக்கெட் சபை வெளியிட்ட செய்தியில், ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம் பெறுவதை எம்.சி.சி. வரவேற்கிறது. கிரிக்கெட்டின் சிரமான ருவென்ரி–20 போட்டி முறையில் இதை விளையாட வேண்டும். ஒருவேளை ஐ.ஓ.சி. ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், ஐ.சி.சி.க்கு சற்று வருமான இழப்பு ஏற்படும். ஆனால், உலகளவில் கிரிக்கெட் பரவ வழி ஏற்படும் என தெரிவித்துள்ளது.

# வென்றார் நடால்

மெக்சிகன் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் முதல்சுற்றில் ஸ்பெயினின் நடால் வெற்றி பெற்றார். மெக்சிக்கோவில் உள்ள அகாபுல்கோவில் நடக்கும் இத்தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் உலகின் முன்னணி வீரரான நடால், ஆர்ஜென்ரீனாவின் தியாகோவைச் சந்தித்தார். இதில் தொடக்கம் முதல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால், முதல் செட்டை 6-2 என வென்றார். இரண்டாவது செட்டையும் 6-2 என தன்வசப்படுத்தினார். முடிவில், நடால் 6-2, 6-2 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.


# தகுதி பெற்றது மட்ரிட்

(கட்லோனியா)

ஸ்பெயினில் நடக்கும் கோபா டெல் ரே கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு ரியல் மட்ரிட் அணி தகுதி பெற்றது.

ஸ்பெயினில் ஆண்டு தோறும் கோபா டெல் ரே கால்பந்து தொடர் நடக்கிறது. தற்போது 109ஆவது கோபா டெல் ரே கால்பந்து தொடர் நடக்கிறது. கடந்த ஜன. 30இல் நடந்த பார்சிலோனா, ரியல் மாட்ரிட் அணிகள் மோதிய அரையிறுதியின் முதல் லீக் போட்டி 1 – 1 என சமநிலையானது. நேற்று முன்தினம் நடந்த அரையிறுதியின் இரண்டாவது லீக் போட்டியில் ரியல் மட்ரிட் அணி, பார்சிலோனாவை எதிர் கொண்டது.

இதில் தொடக்கம் முதல் ரியல் மட்ரிட் அணி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். போட்டியின் 13ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பில் ரியல் மட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒரு கோல் அடித்தார். இதற்கு பார்சிலோனா அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. பின் இரண்டாவது பாதியிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய ரியல் மாட்ரிட் அணிக்கு, கிறிஸ்டியானோ ரொனால்டோ (57 ஆவது நிமிடம்), ரபேல் வரேன் (68 ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்து, அணியின் வெற்றியை உறுதி செய்தனர். பார்சிலோனா




அணிக்கு நட்சத்திர வீரர் மெஸ்சி கோல் ஏதும் அடிக்காமல் ஏமாற்றம் அளித்தார். இருப்பினும் கடைசி நிமிடத்தில் பார்சிலோனாவின் ஜோர்ட் ஆல்பா (89 ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார். முடிவில், ரியல் மட்ரிட், பார்சிலோனாவை 3–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, முதல் அணியாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தவிர, கடந்த ஆண்டு காலி–றுதியில் அடைந்த தோல்விக்கும் பழிதீர்த்துக் கொண்டது. இறுதிப் போட்டியில் ரியல் மட்ரிட் அணி, அத்லேடிகோ மட்ரிட், செவில்லா அணிகளுக்கு இடையிலான அரையிறுதியில் வெற்றி பெறும் அணியை எதிர் கொள்ளும். இறுதிப் போட்டி மே 18இல் இடம்பெறவுள்ளது.

# மெய்வல்லுநர் போட்டி

'(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு ஆழியவளை சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாட-சாலைஅதிபர் பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வு் நிலை வடமராட்சி வலய பிரதம முகாமைத்துவ உதவியாளர் செல்வி பிள்ளையினார் இராஜமணி, சிறப்பு விருந்தினராக மருதங்கேணிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த. பொன்னையா, ஈ.பி.டி.பி. யின் வடமராட்சி அமைப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

# மீண்டும் களமிறங்கும் சுமதிபால

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிலதிபருமான திலங்க சுமதிபால போட்டியிடுவதற்காக நேற்று முன்தினம் தனது வேட்பு மனுவை விளையாட்டுத்துறை அமைச்சில் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கும் திலங்க சுமதி–பால, இலங்கை கிரிக்கெட் சபைத் தலை–வர் பதவிக்குப் போட்டியிடுவதற்கு ஜனாதிபதியின் ஆசீர்வாதம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாக சபைத் தேர்தல் அடுத்த மார்ச் மாத இறுதிப் பகுதியில் இடம் பெறவுள்ளது என ஏற்கனவே உறுதியான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையிலேயே தற்போது திலங்க சுமதிபால தொடர்பான செய்திகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

# பந்து வீச்சாளர் தெரிவில் அவுஸி. குழப்பம்



(ஹைதராபாத்)

ஹைதராபாத்தில் நாளை ஆரம்பமாகும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் பந்து வீச்சாளர்களைத் தெரிவு செய்வதில் எங்களுக்குள் குழப்பமிருக்கின்றது. ஆடுகளத் தன்மையை ஆராய்ந்த பின்னர் அது முடிவு செய்யப்படும் என அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார்.

அடுத்த டெஸ்டில் அவுஸ்ரேலிய அணி 2 சுழற்பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்குமா? என்பதுதான் மில்லியன் டொலர் கேள்விகளாக இருக்கப் போகிறது. சென்னை டெஸ்டின் முடிவை வைத்துப் பார்க்கும் போது அந்த டெஸ்டில் நாங்கள் 2 சுழற்பந்து வீச்சாளருடன் விளையாடியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்ற எண்ணம் வருவது சகஜம்தான்.



ஆனால் இந்த டெஸ்டில் எங்கள் அணியில் வேகப்பந்து வீச்சாளர்கள் தான் அதிகமான விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள். சுழற்பந்து வீச்சு பெரிய அளவில் சுழன்று திரும்பவில்லை. வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சனின் பந்து வீச்சு பிரமாதமாக இருந்தது. இதனால் ஹைதராபாத் டெஸ்ட்டுக்கான பந்து வீச்சாளர்களைத் தேர்வு செய்வதில் எங்களுக்கு குழப்பமான சூழல் ஏற்பட்டிருக்கிறது. எந்தெந்த பந்து வீச்சாளர்கள் அணியில் இடம் பெறுவார்கள் என்பது பற்றி இப்போது எதுவும் உறுதியாக கூற முடியாது. அங்குள்ள ஆடுகளத்தன்மையை பார்த்த பின்னரே அது பற்றி முடிவு செய்வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி பதிவுகள்...


நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி (08)


அச்சுவேலி சென். திரேசா பெண்கள் கல்லூரி (03)



மல்லாகம் மகா வித்தியாலயம்


யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி (105)




கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி (10)




யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி (10)



சென். பற்றிக்ஸ் கல்லூரி (20)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் (10)


கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயம்




காரைநகர் யாழ்ரன் கல்லூரி (50)


வெற்றிலைக்கேணி அ.த.க.பாடசாலை


# த.தே.கூ. - ஐ.தே.க. உறவால் தமிழர்களுக்கு ஆவது என்ன?

**- முத்துக்குமார் கட்டுரையிலிருந்து.**



சம்பந்தன் எதிர்க்கட்சிகளின் கூட்டில் கையொப்பமிடுவதற்கு முன்னர் ரணிலை தமிழ்மக்களின் மீட்பராகக் காட்டவே உண்ணாவிரதத்திற்கு அழைத்திருக்கின்றார். மீட்பரும் மூன்று நாட்கள் தங்கியிருந்து தனது அருட்போதனைகளை வழங்கியிருக்கின்றார். சீடர்களான விக்கிரமபாகுவும், மனோ கணேசனும் மிகுந்த பயபக்தியுடன் மீட்பரின் போதனைகளுக்கு உதவியுள்ளனர்.

வலி.வடக்கு மக்கள் நிலங்களை மீட்பதற்காக காலையிலிருந்து மாலை வரை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் முன்றலில் உண்ணா விரதம் இருந்தனர். மீட்பரும் அவரது சீடர் பரிவாரங்களும் ஒரு மணி நேரம் மட்டுமே உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். மீட்பர் மட்டுமே உரையாற்றினார்.

மீட்பர் பலாலி இராணுவ முகாமும் வேண்டும். மக்கள் குடியேறவும் வேண்டும் என அறைகூவல் விடுத்தார். தாம் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக மக்கள் அனைவரும் குடியமர்த்தப்படுவார்கள் என்றும் மீட்பர் கூறினார். மீட்பர் ஆட்சிக்கு வருவதென்பது இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய நகைச்சுவை. அரசாங்கக் கட்சி பெற்ற வாக்குகளில் அரைவாசியைக் கூட பெறமுடியாத மீட்பர் ஆட்சியமைப்பது பற்றிக் கனவில் மிதக்கின்றார்.

கிளிநொச்சியில் ரணில் காணாமல் போனோரை மீட்டுத்தருவார். சிறையிலிருப்பவர்களை விடுவிப்பார். காணிகளைப் பெற்றுத்தருவார் என மக்களுக்கு கூறியே சிறீதரன் மக்களை ரணிலின் சந்திப்புக்கு இழுத்துவந்தார். மக்களும் தங்களை மீட்க வந்த மீட்பர் எனக்கருதி ரணிலின் காலைப்பிடித்து அழுதனர். காலைக் கட்டிப்பிடிக்கும் போது ரணிலின் காலிலும் தமிழனின் இரத்தம் இருந்ததை அவர்கள் அறிந்தார்களோ தெரியாது.

கிளிநொச்சி சந்திப்பு சிறீதரனின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்திலேயே இடம் பெற்றது. இதன்போது கூட்டமைப்பின் அலுவலகம் ஐக்கிய தேசியக் கட்சியின் கிளைக் காரியாலயம் போலத் தோற்றமளித்தது.

பருத்தித்துறை வல்லிபுரஆழ்வார் கோவிலிலும் மக்கள் சந்திப்பு இடம்பெற்றது. கூட்டமைப்பின் உள்ளூராட்சிசபைத் தலைவர்களும் உறுப்பினர்களும் இதற்காக ஓடி ஓடி உழைத்தனர். இது 1965ஆம் ஆண்டினை நினைவுபடுத்தியது. அப்போது தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து அரசாங்கத்தை அமைத்திருந்தது. மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்தார். அதுவரை காலமும் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களுக்கு, அது ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் சரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலும் சரி ஆர்ப்பாட்டம் செய்தல், கறுப்புக்கொடி காட்டுதல் எனப் போராட்டம் நடாத்திக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியினர் 1965 இன் பின் போட்டி போட்டுக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களை வரவேற்பதிலும், வருகை நிகழ்வுகளுக்கு தோரணம் கட்டுவதிலும் கவனம் செலுத்தியிருந்தனர். அதேபோல தற்போது ஓடி ஓடி உழைக்கின்றனர்.

1965இல் ஐக்கிய தேசியக் கட்சியுடனான தமிழரசுக்கட்சியின் காதல் உறவினை சகிக்க முடியாததினால் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியிலிருந்து முத்துக்குமாரசுவாமி போன்ற முன்னாள் இளைஞர் தலைவர்கள் வெளியேறி, கட்சி அரசியலுக்கு அப்பால் ஒரு விடுதலை இயக்கமாக ஈழத்தமிழர் விடுதலை இயக்கம் என்ற அமைப்பினை தோற்றுவித்தனர். அந்த அடித்தளத்திலிருந்தே 1970இல் தமிழ் மாணவர் பேரவையும், பின்னர் 1973இல் தமிழ் இளைஞர் பேரவையும், தொடர்ந்து விடுதலை இயக்கங்களும் தோற்றம்பெற்றன என்பது வரலாறு. இன்று அவ்வாறு புது அரசியல் இயக்கம் தமிழரசுக்கட்சியிலிருந்து தோற்றம் பெறுவதற்கான சூழல் எதுவுமில்லை. தமிழரசுக்கட்சியில் இவ்வாறான போர்க்குணம் மிக்கவர்கள் எவருமில்லை. அங்கு இருப்பவர்கள் எல்லோரும் ஜொலிஅரசியல் செய்பவர்களே!


ஐக்கிய தேசியக் கட்சி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறவின் மூலம் ஆட்சிமாற்றத்தை உருவாக்கலாம் என்ற கருத்து சிலரிடம் உள்ளது. மேற்குலகச் சக்திகளும் அதற்காகத்தான் முயன்று வருகின்றனர். ஆட்சிமாற்றம் தமிழர்களுக்கு நன்மை பயக்கும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் ரணில் தமிழ்மக்களுக்கான தீர்வை முன்வைப்பார் என சுமந்திரனும் பகிரங்கமாக கூறியிருக்கிறார்.

சுமந்திரன் அரசியலுக்கு புதிது என்பதால் இவ்வாறு கூறுகின்றார். ஆனால் இலங்கையின் அரசியல் வரலாற்றை தொடர்ச்சியாக அவதானிப்பவர்களுக்கு உண்மைகள் நன்றாகவே தெரியும். தமிழ்மக்களைப் பொறுத்தவரை இரண்டு சிங்கள பிரதான கட்சிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முதுகில்குத்தும் செயற்பாடுதான் சிங்களக் குடியேற்றங்கள். இவற்றை நுணுக்கமாகக் கணிப்பிட்டு முதன்முதலில் செயற்படுத்தியவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள் தான். கல்லோயாத்திட்டம், கந்தளாய்த்திட்டம், அல்லைத்திட்டம் ஆகிய முக்கிய சிங்களக் குடியேற்றங்கள் ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் உருவானவைதான்.

தற்போதைய கள யதார்த்தமும் இங்கு முக்கியமானது. கனவிலும் நினைத்திராத போர் வெற்றியை மகிந்தர் பெற்றுக்கொடுத்ததினால் சிங்கள மக்கள் மத்தியில் அசைக்க முடியாத ஒரு மன்னராக அவர் விளங்குகின்றார். இது ரணிலுக்கு நன்றாகவே தெரியும். தான் ஆட்சியைக் கைப்பற்றுவது இப்போதைக்கு சாத்தியமல்ல என்பது நன்கு தெரிந்த நிலையில் கட்சிக்குள் தமது தலைமையைப் பாதுகாக்கும் விடயத்திற்கே அவர் முன்னுரிமை கொடுக்கின்றார். இப்பாதுகாக்கும் செயற்பாட்டிற்கு மகிந்தரின் ஆதரவு மிகவும் அவசியம். இதுவரை காலமும் அவரின் ஆதரவினாலேயே தலைமைப்பதவியை ரணில் தக்கவைத்திருக்கின்றார்.

# கடல் ஆமை



• Olive Ridley எனப்படும் கடல் ஆமைகள் பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள இந்து, பசிபிக், அட்லாண்டிக் பெருங்கடல்களில் வசிக்கின்றன.

• இவை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். இந்தியா, கோஸ்டாரிகா மற்றும் மெக்ஸிகோ ஆகிய நாடுகளில் கடற்கரையில் அதிகம் உள்ளன.

• இவை சகல பட்சிணி ஆகும். கடல் பாசி, நண்டு வகைகள், சிறிய மீன்கள், சிப்பிகள் இதன் உணவாகின்றன.

• முட்டை இடுவதற்கு ஆயிரக்கணக்கான கடல் ஆமைகள் சேர்ந்து கடலோரம் வரும். இக்கூட்டத்தின் பெயர் "அர்ரிபாடாஸ" (arribadas) எனப்படும்.

• ஒருமுறை 200 முதல் 300 முட்டைகள் வரை இடும். மணலில் சின்ன பள்ளம் தோண்டி அதில் முட்டை இடும். ஆனால் பறவை, பாம்பு, நாய் ஆகியவை இதன் முட்டைகளை எளிதில் கண்டுபிடித்து சாப்பிட்டுவிடும்.

• புதிதாக பிறந்த கடல் ஆமைக்குஞ்சு 15-18 கிராம் எடை உள்ளதாக இருக்கும். இவை பிறந்தவுடனேயே கடலை நோக்கி நகரத் தொடங்கும்.

• இவை 11 முதல் 16 ஆண்டுகளில் முதிர்ச்சி அடைகின்றன. தான் பிறந்த இடத்திற்கே மீண்டும் வந்து முட்டையிடும்.

• நில ஆமைக்கும் கடல் ஆமைக்கும் உள்ள முக்கிய வித்தியாசம் என்னவென்றால், நில ஆமையை கவிழ்த்துப் போட்டால் குப்புற இருக்கும் நிலையில் இருந்து எழுந்து நடக்க ஆரம்பிக்கும். கடல் ஆமையால் அவ்வாறு எழும்ப முடியாது.

• உலகில் 7 விதமான கடல் ஆமைகள் உள்ளன. இவை தோல் முதுகு, பச்சை, பெருந்தலை, வளைந்த மூக்கு, கெம்ப்ஸ் ரிட்லி, நேர்முதுகு மற்றும் ஒலிவ் ரிட்லி ஆகும்.



திருமணமாகாத பெண்ணை ஆங்கிலத்தில் Virgin என்கிறோம். இந்த வார்த்தை எப்படி வந்தது? முற்காலத்தில் இங்கிலாந்து நெசவாலையில் வறுமையில் வாடும் இளம் பெண்களையே ஆங்கிலத்தில் Virgin என்பர். இதுவே நாளடைவில் எல்லாக் கன்னிப்பெண்களுக்கும் பெயரானது. திருமணமாகாத ஆண்களை ஆங்கிலத்தில் bachelor என்கிறோம். இலத்தீன் மொழியில் "பேக்கலேரியஸ்" என்றால் அனுபவமற்ற என்று பொருள். இச்சொல் நாளடைவில் "பேச்லர்" என்று மாறியது.

# ஆணும் பெண்ணும்

# புத்தர்...




புத்தருக்குப் பல பெயர்கள் உள்ளன. அவரது குடும்பப் பெயர் "கவுதமர்". என்பதாகும். "சித்தார்த்தர்" என்று பின்னர் அழைக்கப்பட்டார். சித்தார்த்தர் என்பதற்கு "இலட்சியத்தை அடைந்தவர்" என்று பொருள். மேலும் அவரை "பகவத்" என்றும் அழைத்தார்கள். பகவத் என்றால் "ஆசிர்வதிக்கப்பட்டவர்" என்று பொருள்.

இது தவிர "ஜீன்" (வென்றவர்) என்ற பெயரும் உண்டு. சாக்கியமுனி, ததாகதர் என்ற பெயர்களிலும் அவர் பின்னாட்களில் அழைக்கப்பட்டார்.

பொதுவாக அழைக்கப்படும் புத்தர் என்ற சொல் "புத்" (விழிப்பு) என்பதிலிருந்து வந்ததாகும்.

# சினிமா சினிமா


தீபிகா படுகோன்

"அலுவலகங்களில் பணிபுரியும் என் வயதுடைய பெண்களைப் போலவே என்னை நான் கருதுகிறேன். நான் வித்தியாசமாக எதையும் செய்யவில்லை. மற்ற பெண்களைப் போலவே நானும் ஒரு தொழிலில் இருக்கிறேன். திரையுலகைப் பொறுத்தவரை திறமையும், கடுமையான உழைப்புமே புகழின் உச்சிக்கு கொண்டு செல்லும். திறமையான நடிகர்களுடன் நடித்தது என்னுடைய அதிர்ஷ்டம். என் குடும்பத்தினர் ஆதரவு எனக்கு பக்கபலமாக அமைந்தது. என்னுடைய நடிப்புத் தொழிலைப் பற்றி அவர்கள் எப்போதுமே கேள்வி கேட்டதில்லை. ரேஸ் -2 படத்தில் முதன்முறையாக வித்தியாசமான பாத்திரத்தில் நடித்திருக்கிறேன். அவள் மோசமான பெண் அல்ல. அவள் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்கள் அவளை அப்படி மாறிவிட்டன. உண்மை வாழ்க்கையில் இதுபோன்ற பாத்திரங்களை ஏற்று நடிப்பதை சவாலாகவே கருதுகிறேன். படத்தைப் பார்ப்பவர்கள் ரசித்தால் போதும். அதுவே எனக்குக் கிடைக்கும் மிகப் பெரிய வெற்றியாகும்" இப்படி சொல்லியிருப்பவர் தீபிகா படுகோனே.

கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்துக்குப் பின், பவர்ஸ்டார் சீனிவாசனின் மார்க்கெட் எகிறி நிற்பதால், சில ஹீரோக்களே அவருக்கு சிபாரிசு செய்கின்றனர். சந்தானத்தை, "புக்" செய்பவர்கள், பவர் ஸ்டாரையும் கூட்டணி சேர்த்துக் கொள்ளுங்கள் என்கின்றனர். இதனால், பவர் ஸ்டாரை கழட்டி விட நினைத்த சந்தானம், வேறு வழியில்லாமல் அவருடன் கூட்டணி வைக்கும் கட்டாயத்திலிருக்கிறார்.

"மதராசப்பட்டினம்" படம் மூலம் தமிழில் அறிமுகமான எமி ஜாக்சன், கோலிவுட், பாலிவுட் படங்களில் பிஸியாக இருக்கிறார். அவரது வழியில் மற்றொரு பிரிட்டிஷ் மொடலான நிகிஷா பட்டேல் "தலைவன்" படத்தின் மூலம் தமிழுக்கு வருகிறார். எஸ்.ஜே.சூர்யா தெலுங்கில் இயக்கிய "புலி" படத்தில் பவன் கல்யாண் ஜோடியாக அறிமுகமானவர். திரைக்கு வந்த இரண்டே ஆண்டுகளில் கன்னடத்தில், மலையாளத்தில், தெலுங்கில் என ஐந்து ஹிட் படங்கள். "அப்போதே என்னைத் தமிழ் சினிமாவுக்கு வர சொன்னார் எஸ்.ஜே. சூர்யா. சந்தர்ப்பம் வந்தால் தமிழுக்கு வருகிறேன் என சொல்லியிருந்தேன். இப்போது வந்து விட்டேன்" என தனது ட்விட்டரில் சொல்லியிருக்கிறார் நிகிஷா பட்டேல்.


நிகிஷா பட்டேல்

சினிமாவில் என் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகும் படம் 6 என்கிறார் ஷாம். சந்தோஷமாக வாழும் ஒருவனின் வாழ்க்கையில் திடீரென புயல் தாக்கி அவனை என்னென்ன செய்கிறது என்பதே இப்படத்தின் கதை என்று சொல்லும் ஷாம், 6 ஆண்டு, 6 மாதம், 6 வாரம், 6 மணி நேர கால கட்டத்தில் நடிக்கும் இந்த கதை, 6 மாநிலங்களுக்கும் செல்கிறது என்கிறார்.


சமந்தா

கௌதம் மேனனின் "நீதானே என் பொன் வசந்தம்" படத்திற்குப் பிறகு, ஒரே நேரத்தில் மணிரத்னத்தின் "கடல்", ஷங்கரின் "ஐ" படங்களில் நடிக்க சமந்தா தேர்வாகி இருந்தார். ஆனால் ஸ்கின் அலர்ஜி காரணமாக அப்படங்களிலிருந்து விலகினார். இப்போது மீண்டும் நடிக்க வந்துள்ளார். சிறு வயது முதலே பேட்மின்டன் விளையாடுவதில் சமந்தாவுக்கு விருப்பம் அதிகமாம். இப்போது மீண்டும் தன் ஆர்வத்தை விளையாட்டு பக்கமும் திருப்பி இருக்கிறார். பேட்மின்டன் போட்டிகளில் பங்கேற்கும் திட்டத்தையும் சமந்தா வைத்திருப்பதாக கூறப்படுகிறது. முன்னாள் நடிகையும் அஜித்தின் மனைவியுமான ஷாலினி ஏற்கனவே பேட்மின்டனில் சம்பியன் பட்டங்களை வென்று வருகிறார். அந்த வரிசையில், "சினிமாவை தவிர விளையாட்டிலும் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறேன். அதன் முடிவு என்ன என்பதற்கு காலம்தான் பதில் சொல்லும்" என தன் ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்திருக்கிறார் சமந்தா.

இயக்குநர்கள் பாலா, அமீர், சுசீந்திரன், வெற்றிமாறன், லிங்குசாமி ஆகியோரின் வழியில் படத் தயாரிப்பில் இறங்குகிறார் இயக்குநர் மிஷ்கின். தனது தயாரிப்பு நிறுவனத்துக்கு "லோன் வுல்.்ப்" எனப் பெயரிட்டுள்ளார். "என்னை மிகவும் கவர்ந்த மிருகம் ஓநாய். அவை கூட்டமாகத் திரியும் என் கேள்விப்பட்டுள்ளோம். சில நேரங்களில் சில ஓநாய்கள் தனியாக வாழும். அவற்றை "லோன் வுல்.்ப்" என்பார்கள். அதன் குணாதிசயங்களும், வாழ்க்கை முறைகளும் என்னைக் கவர்ந்ததால் எனது தயாரிப்பு நிறுவனத்துக்கு அப்பெயரை வைத்துள்ளேன். இதன் மூலம் தரமான படங்களைத் தர இருக்கிறேன்" என்று கூறும் மிஷ்கின், இந்த ஆண்டு முதல் தயாரிப்பை வெளியிட இருக்கிறார்.


லட்சுமி மேனன்

சுந்தர பாண்டியன், கும்கி படங்களில் நடித்த லட்சுமி மேனனின் கைவசம், குட்டிப்புலி, மஞ்சப்பை ஆகிய படங்கள் உள்ளன. லட்சுமி மேனன் தற்போது பத்தாம் வகுப்பு படித்து வருகிறார். வருகிற மார்ச் மாதம் பரீட்சை எழுதி முடித்ததும் படிப்புக்கு, "குட்பை" சொல்லிவிட்டு, முழு வீச்சில் சினிமாவில் இறங்கப் போவதாக கூறுகிறார்.

# உயிர்கள் மீது கருணை!

மனிதர்களுக்கு இருக்க வேண்டிய குணங்களில் முக்கியமானது இரக்க குணம். பிறர் துயர் கண்டு இரக்கம் கொள்வது மனிதத் தன்மை. இரக்கமில்லா நெஞ்சம் ஈரமில்லா நெஞ்சம். மனிதன், மனிதனிடம் இரக்கம்



காட்டுவதுடன் நில்லாது, பிற ஜீவன்களிடமும் இரக்கம் கொள்ள வேண்டும்.

மனிதனுக்கு பேச முடியும் என்ன வேண்டுமென்று கேட்க முடியும் துன்பங்களை வாய் விட்டுச் சொல்ல முடியும். இதர ஜீவன்களால் அப்படி செய்ய முடியாது. அதனால்தான், இந்த வாயில்லா ஜீவன்களிடம் அன்பு, இரக்கம் கொள்ள வேண்டும்.

விலங்குகள், எங்கேயோ அலைந்து, திரிந்து தங்களுக்கான ஆகாரத்தைத் தேடிக் கொள்கின்றன, மனிதரிடம் எதையும் எதிர்பார்ப்பதில்லை. ஆனால், மனிதன் அதைத் தேடி, அலைந்து, பிடித்துக் கொன்றும் மகிழ்கிறான்.


பசு இருக்கிறது. அதன் பாலை கறந்து, குடும்பத்தில் உள்ள அனைவரும் பாலாகவும், தயிராகவும், வெண்ணெய், நெய்யாகவும் உண்டு, உடலை வளர்க்கின்றனர். ஆனால், பசு என்ன செய்கிறது? எங்கேயோ சென்று மேய்ந்து விட்டு, வீட்டுக்கு வந்து சேருகிறது. வீடுகளில் அதற்கு போடும் தீனி போதுமானதாக இராது. அது, வெளியில் போய்த் தான் வயிறு நிறைய சாப்பிட்டு விட்டு வருகிறது.

ஆனாலும், பால் வற்றியதும், அதை அடிமாடாக விற்று, அதில் கிடைக்கும் பணத்தை வாங்கி, திருப்தியடைந்து விடுகிறான் மனிதன். பசு, பால் கொடுத்ததற்கு மனிதன் காட்டும் நன்றி இது! மாடு என்ன கேட்கிறது? "வயலில் கிடைக்கும் நெல்லை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் வைக்கோலை எனக்குப் போடுங்கள்... அரிசியை எடுத்துக் கொள்ளுங்கள் தவிட்டை எனக்குப் போடுங்கள்... அரிசியை விதவிதமாக சாப்பிடுங்கள் கஞ்சி, கழுநீரை எனக்கு வையுங்கள்... கீரையை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் அதன் வேரை எனக்குப் போடுங்கள்... காய்கறி, பழம் இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள் அவற்றின் தோலை எனக்கு போடுங்கள்..."

- இப்படி, மனிதனுக்கு வேண்டாத பொருட்களையே அவை ஆகாரமாக உண்டு வாழ்கின்றன, நமக்கும் உதவுகின்றன. பசு மட்டுமா... எருமை, குதிரை, யானை, நாய் போன்ற பிராணிகள் கூட நம்மிடம் எதையும் கேட்காமல், நமக்கு வேலை செய்கின்றன, உதவுகின்றன. ஒரு ஒற்றை மாட்டு வண்டியில், முப்பது மூட்டை சிமெந்தை ஏற்றி, அதை இழுக்கச் சொல்கின்றனர். முக்கி, முனகி இழுத்துச் செல்கிறது மாடு. குதிரை வேகமாகத் தான் வண்டியை இழுத்து ஓடுகிறது. இருந்தாலும், சாட்டையால் இரண்டடி கொடுக்கிறார் வண்டிக்காரர்.

கழுதையின் பிழைப்பு இன்னும் மோசம். அதன் முதுகில், இரண்டு கல்லுரல்களை கட்டித் தொங்கவிட்டு ஓட்டிச் செல்வர். போதாக் குறைக்கு, தங்கள் பிள்ளையையும் அதன்மேல் உட்கார வைத்து விடுவர். அது, நடக்க முடியாமல் பின்னங்கால்களைப் பின்னி, பளுவை சுமந்து செல்லும். இதையெல்லாம் பார்த்து நாம், "ஐயோ பாவம்..." என்று சொன்னால், அதுவே நாம் இரக்கப்படுவதாக அர்த்தம். இதைத்தான் வள்ளலாரும், பிற ஜீவன்களிடம் இரக்கம் காட்ட வேண்டும் என்றார். இந்த குணம் மனிதனிடம் இருக்க வேண்டும்!


# உங்களிடம் இருந்து Facebook எவ்வளவு சம்பாதிக்கிறது?




நம்மில் சிலர் காலை முதல் இரவு வரை (மறுநாள் காலை வரை) பேஸ்புக்கிலேயே மூழ்கி கிடக்கிறோம். கடந்த வருடம் பங்குச் சந்தையில் கால் பதித்த பேஸ்புக் தனது வருமானத்தில் சில ஏற்ற இறக்கங்களை சந்தித்து வருகிறது. அத்தோடு Privacy விசயங்களிலும் கொஞ்சம் மாற்றங்கள் செய்துள்ளது. இந்த நிலையில் பேஸ்புக்-பயனரிடம் இருந்து எவ்வளவு சம்பாதிக்கிறது என்று அறிவோம் வாருங்கள்.

1. முதலில் https://goprivate.abine.com/ என்ற இந்த தளத்திற்கு செல்லவும்.


2. கீழே உள்ளது போல சில கேள்விகள் இருக்கும் அவற்றுக்கு பதிலளிக்கவும்.




3. இப்போது உங்கள் மூலம் பேஸ்புக் எவ்வளவு சம்பாதிக்கிறது என்று வரும்.

இதன் மூலம் உங்கள் தனிப்பட்ட தகவல்கள் இணையத்தில் பகிரப்படுகிறது. உங்கள் Privacy தகவலை விற்றுத் தான் பேஸ்புக் சம்பாதிக்கிறது.



வாரம் ஒரு பாடசாலை

# கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்



அதிபர்
திரு. அ.பங்கையற் செல்வன்

கிளிநொச்சி மகாவித்தியாலயம் 1929 இல் ஆரம்பிக்கப்பட்டது. "புத்தியும் உத்தமமும் ஞானமும் ஆக்கமும் ஒளிரும் மாணவரை புது உலகுக்காய் ஆக்குவோம்" என்ற வாசகத்தை நோக்காகக் கொண்டது. "மாணவவளத்தையும் ஆசிரியர் வளத்தையும் சூழலின் வளத்தையும் இணக்கி அறிவுக்கான உச்சமான பயனுறுதி மிக்க பணியை நாளாந்தம் முன்னிறுத்தி உலக சுபீட்சத்தில் பங்கெடுப்போம்'' என்ற வாசகத்தை இலக்காகக் கொண்டது. "கற்க கசடற'' என்ற மகுடவாசகத்தை இலச்சினையில் தாங்கியிருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வியிலும் கல்வியோடு இணைந்த கலைத்திட்டத்திலும் முதன்மையான பாடசாலையாகத் திகழ்வது கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆகும். இப்பாடசாலையின் நீண்ட பயணத்தில் இதன் உயர்வுக்காக தற்போதுள்ள அதிபர், ஆசிரியர்கள், அமரத்துவம் அடைந்த அதிபர், ஆசிரியர்கள் போன்றோர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை போற்றத்தக்கதும் நினைவு கூரத்தக்கதுமான விடயமாகும்.

நீண்ட கொடிய போரின்போது இப்பாடசாலை அனுபவித்த துன்ப, துயரங்கள் சொல்லில் அடங்காது. இப்பாடசாலை, நகரின் மத்தியில் இருப்பதால் நகருக்கு ஏற்படும் தாக்கங்களும், செல்வாக்குகளும் இப் பாடசாலையின் மீது செல்வாக்குச் செலுத்துவது அவ்வப்போது தவிர்க்க இயலாததாக இருந்து வருகின்றது.

ஏறத்தாழ 10 இற்கு மேற்பட்ட இடப்பெயர்வுகளை இப் பாடசாலை சந்தித்துள்ளது. இச் சந்தர்ப்பங்களில் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ தனது வளங்களை இழந்து மீண்டும், மீண்டும் புத்துயிர் பெற்று வந்துள்ளது.

2009 இடப்பெயர்வு, முகாம்வாழ்க்கை, எல்லாமுகாம்களிலும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் வாழ்வு காணப்பட்டது. 2010 ஜனவரியில் சொந்த இடத்தில் மீள பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலை ஆரம்பித்த போது அழிந்து போன கட்டடங்களும் உடைந்து போன உள்ளங்களும் மட்டுமே பாடசாலை வளாகத்தில் இருந்தன. நம்பிக்கையோடு நாட்களை நகர்த்தி அதிபர் ஆசிரியர்கள், அர்ப்பணிப்போடு பணிபுரிய திடசங்கற்பம் கொண்டனர்.

2010.03.03 அன்று அதிபராக இருந்த சிவஞானம் ஸ்ரீதரன் அவர்கள் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக பாடசாலையை அ.பங்கையற்செல்வனிடம் ஒப்படைத்துச் சென்றார். 2010.04.12 அன்று பங்கையற்செல்வன் அவர்கள் பாடசாலையின் 28ஆவது அதிபராக கடமையேற்றார். முழுமையாக அழிவடைந்த ஒரு கல்விக் கூடம் இரண்டரை வருடகாலத்திற்குள் பௌதிக மனிதவள கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் கண்ட முன்னேற்றம் ஒரு நகர்வாக அன்றி ஒரு பாய்ச்சலாகவே கருத வேண்டும்.

1929 ஆம் ஆண்டு சேர்.பொன். இராமநாதன் அவர்களின் பெருமுயற்சியில் ஒரு ஆசிரியருடனும் நான்கு மாணவர்களுடனும் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 2008 இடப்பெயர்வின் போது 2400 மாணவர்களைக்கொண்டு இயங்கிய இப்பாடசாலை, 2013 இல் 2000 மாணவர்களை அண்மிக்கும் நிலையில் உள்ளது. சேர். பொன். இராமநாதன் அவர்கள் தமிழ் மக்களின் கல்விக்காக உருவாக்கிய பெரும் சொத்து யாழ். பல்கலைக்கழகம் என்பது குறிப்பிடத்தக்க விடயமொன்றாகும்.

2010, 2011, 2012 காலங்களில் பெரு விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகளில் கோட்ட, மாவட்ட, மாகாண தேசிய மட்டங்களில் பல நிகழ்வுகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டியமை பெருமைக்குரிய விடமாகும். தேசிய பாடசாலை துடுப்பாட்ட அணிக்கு இப்பாடசாலை மாணவன் ந.தனுஷன் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது அவர் தனது துடுப்பாட்ட எதிர்கால வாழ்வுக்காக றோயல் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ளமையும் பெருமைக்குரிய விடயமாகும்.

முதன் முறையாக இப்பாடசாலையில் அறிமுகம் செய்யப்பட்ட கூடைப்பந்து அணி தேசிய ரீதியில் முதலிடம் பெற்றமை குறிப்பிட்டுக் கூற வேண்டிய விடயமாகும்.

விஞ்ஞான வினாடி - வினாப்போட்டியில் 2 மாணவர்கள் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றனர். இம்முறை மூன்று மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். பாடசாலையில் பௌதிகத் தேவையாக முக்கியமாக விளையாட்டு மைதானத்தைப் பூர்த்தி செய்வதற்கு 6 பரப்புக் காணி கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. இது இப்பாடசாலை மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாட்டுக்கு முக்கியமான தொ[illegible]றாக கருதுகின்றோம். இப்பாடசாலையின் கல்வி, கலை, விளையாட்டுத் துறைகள் மென்மேலும் வளர பாராட்டி வாழ்த்துகின்றோம்.



2013 இல் பூர்த்தியாகியுள்ள பாடசாலைக் கட்டடத்தின் மாதிரியுரு



2013இல் கால்கோள் விழாவின்போது



2012இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள்



2010 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் செயற்பாடுகளின் போது...

# யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு பல திட்டங்களினூடான உதவிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பல பாடசாலைகள் ஊட்டப்பாட சாலைகளாகத் தெரிவு செய்யப் பட்டு சுற்றுப்புற சுவர்களுக்காக 5இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள் ளதுடன்,பல்வேறு செயற்றிட்டங் களூடாக பாடசாலைக்கான உத விகள் வழங்கப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கல்வயல் சிறி சண்முகானந்தா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றபோது நிகழ்வின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

பெரிய பாடசாலைகளில் நடை பெறும் விளையாட்டு நிகழ்வு களைப் போல் இப்பாடசாலை யின் விளையாட்டு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

இப் பாடசாலைச் சமூகம் என்னிடம் விடுத்த வேண்டு கோளுக்கு அமைய இவ் ஆண் டுக்கான வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிழற் பிரதி இயந்திரம், கோவை தாங்கி என்பவற்றை வழங்கு வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என அவர்தெரி வித்தார்.

இந் நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தனதுரையில், வடமாகாண மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்நிலைக்கு இட்டுச் செல் லும் வடமாகாண கல்விக்குழு மற்றும் கல்விசார் அதிகாரி களுடனான விசேட கலந்துரை யாடலில் இனங்காணப்பட்ட பாடசாலை வளத்தேவைகள், கற்றல் மேம்பாட்டுக்கான மாண வர்களின் தேவைகள் என்பன தீர்க்கப்பட்டு வளமானதொரு ஒரு கல்விச் செயற்பாடுகள் முன் னெடுக்கப்படும்.

பெற்றோர்கள் மாணவர் களின் கல்விச் செயற்பாட்டில் அதிக அக்கறை செலுத்தி ஆரோக்கியமான கல்விச் சமூ கத்தை கட்டியெழுப்ப முன்வர வேண்டும் என்றார்.

கோட்டக் கல்வி அதிகாரி சிவானந்தன், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி பிரதேச இணைப் பாளர் அலக்சாண்டர் சூசைமுத்து (சார்ள்ஸ்),கிராம அலுவலர் வாம தேவன் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர்,பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஆசிரிய ஆலோசகர் சங்க அங்குரார்ப்பணம்

(வலிகாமம்)

வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்களின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களின் பிரச்சினைகளை ஆராயும் வகையில் சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக் கப்பட்டுள்ளது.

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் எதிர் நோக்கி வரும் கடமை ரீதியிலான பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் ஏதுவாக வடமாகாண சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளதாக அச் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்.பி. ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார்.



அங்குரார்ப்பணக் கூட்டம், கடந்த திங்கட் கிழமை காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி [illegible]வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் பின்வருவோர் நடப்பாண்டிற்குரிய உறுப்பினர் களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக தி. சிவரூபன், உப தலைவராக கா.லோகராஜன், பொதுச் செயலாளராக என்.பி. ஸ்ரீந்திரன், இணைச் செயலாளர்களாக வின்சன் கோமகன், ந. ஸ்ரீகாந்தா ஆகியோரும், பொருளாளராக ச. கோபிநாத், செய்தியாளராக யே.நிசாகர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்வி வலயப் பிரதிநிதிகளாக, கிளிநொச்சி வலயத்திற்கு க.சிவாலனும், யாழ். வலயத்திற்கு ஐ.தயாபரன், வலிகாமம் வலயத்திற்குப் ப. அருந் தவம், வடமராட்சி வலயத்திற்கு நா. மகேந்திரன், மடுவலயத்திற்கு பொ. எட்வேட் அல்றின் லம் பேட்டு, முல்லை வலயத்திற்கு க. நவந்தன், துணுக்காய் வலயத்திற்கு திருமதி ஜெ.ஜெபாலச் சந்திரன், தீவகவலயத்திற்கு பு. ஸ்ரீஸ்கந்தராசா, வவுனியா தெற்கு வலயத்திற்கு க.திருவருள் நேசன் ஆகியோர்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.(06)

# கன்ரர் வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் காலை இழந்தார்

(வலிகாமம்)

வீதியில் நடந்து வந்து கொண்டிருந்த பாதசாரிஒருவரை, பின்பக்கத்திலிருந்து வந்த கன்ரர் ரக வாகனம் மோதியதில், பாதசாரி தனது இடதுகாலை இழக்க வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது.

இந்தப் பரிதாபகரமான விபத் துச் சம்பவம் வவுனியா - புதுக் குளம் பகுதியில் கடந்த சனிக் கிழமை காலை நடந்துள்ளது.

கன்ரர் ரக வாகனச் சாரதி யின் கண்மூடித்தனமான இந்த மோதலினால், தனது இடது காலை இழக்கும் நிலைக்கு உள்ளானவர் வவுனியா நக ரைச் சேர்ந்த ந. இரத்தின ஸ்ரீ திரன் என்ற 52 வயதையுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தை யாவர்.

இவர் வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்ற போதும், இவரது இடதுகால் பலத்த சேதத்திற்கு உட்பட்டிருப்பதால் முழங்கா லிற்கு கீழ் உள்ள பகுதி அகற் றப்படவேண்டும் என வைத்திய சாலை டாக்டர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சார தியைக் கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்தியபோதும், சாரதி பிணையில் விடுதலை யாகியுள்ளார் எனத் தெரிவிக் கப்படுகிறது. (06)



சிறுத்தீவு, புனித லூர்து அன்னை ஹெவித் திருநாள் அண்மையில் நடைபெற்றபோது, ஹெவிபீடத்தில் அருட்தந்தையார் திருப்பலி ஒப்புக் கொடுப்பதைக்காணலாம். (68)

# பதிவிறக்கப் பெட்டகம்

இங்கே இருக்கிறேன் நான்
என்று அறிவிக்க
இனிமையானதொரு
சுவல் மட்டும் போதும்.
இங்கே இருந்தேன்
நானென்பதற்கொரு
வெறும் இறகைக்
கீழே போட்டால் போதும்.
இன்னும் இருப்பேன்
என்பதற்குச் சாட்சியாக
அடைகாத்த
சூடுமட்டும் போதும்.
இதை விட
எளிமையாக எப்படிக்
கிளிகள் வெளிப்படுத்தும்
உயிரை?

– பி.பி.ராமச்சந்திரன் (மலையாளம்)

நான் இறக்கும் போது
என் ஜன்னலைத்
திறந்து வைத்து விடுங்கள்.
தோடம்பழச் சுளைகளை
சுவைத்துக் கொண்டிருக்கும்
குழந்தை
என் ஜன்னல் வழியே
தெரிகிறது.
அறுவடை செய்த நெல்லை
விவசாயி பதப்படுத்திக்
கொண்டிருப்பது
என் ஜன்னல் வழியே
தெரிகிறது.
நான் இறக்கும் போது
என் ஜன்னலைத்
திறந்து வைத்து விடுங்கள்.

– காஸியா லோர்கா

தாகித்தவர் இந்த உலகில்
தண்ணீரைத் தேடுகின்றனர்
தண்ணீரும்
தேடிக்கொண்டிருக்கிறது
தாகம் கொண்டவர்களை!

– ஜலாலுத்தீன் ரூமி

புறாக்கூண்டுக்குள் இருந்து
புறாவை விரட்டிவிட்டு
கழுகை அடைத்து வைக்கும்
மனநிலையை
எப்படி எதிர்கொள்வது
மண்ணுள்ளிப் பாம்புக்காக
கோடரியைத் தேடியலையும்
ஒரு சித்திரத்தை
காகிதத்தில் வரைந்து
மெல்ல மெல்ல உயிர் பெருக்க
காகிதம் அமிழ்ந்து
அறை மூழ்கி
ஊர் தாண்டி
உலகம் அடங்காமல்
வெளியில் திமிறியபோது
தன்னை அவ்வோவியம்
தழுவிக்கொள்ள
சிறகை அடித்தபடி
பறக்காமல் நிலைபெற்றுவிட்ட
இன்னொரு ஓவியமாகக்
காத்துக் கிடக்கிறது
விரட்டிவிடப்பட்ட புறா.

– ஹரன்பிரசன்னா

ஈயாடும் தேனீர் கோப்பையுடன்
யாரும் நடமாடாத படிக்கட்டில்
தலை கவிழ்ந்து
அமர்ந்திருக்கிறாள்
மெல்லக்குலுங்கும்
முதுகுடனும்
கண்ணீர் சொட்டுகள்
பிரதிபலிக்கும்
காலணிகளுடனும்.
தெரியாத ஒருத்திக்கு
சொல்வதற்கு என்னிடம்
எந்த ஆறுதல்
வார்த்தைகளும் இல்லை.
அதே படிக்கட்டை
ஒவ்வொரு முறை
கடக்கும்போதும்
நினைத்துக்கொள்கிறேன்
தெரிந்த ஒருத்திக்குச்
சொல்வதற்கு எந்த
ஆறுதல் வார்த்தைகளும்
இல்லாதவர்களை.

– லதாமகன்

ஏழு கடல்களைத்
தாண்டினேன்
ஏழு மலைமுடிகளில் ஏறி
பள்ளத்தாக்குகளில்
இறங்கினேன்
பெருநிலம் எங்கும்
நடந்தேன்
நகரங்களின் வழியாக நடந்து
உலகத்தையே சுற்றிக்
கடைசியில்
என் வீட்டிற்கே திரும்பினேன்
என் தோட்டத்து செடியொன்றின்
இலைநுனியில் இருந்த
பனித்துளிக்குள்
உலகமே இருக்கக் கண்டு
வெட்கினேன்

– மோஹ்சென் மக்மல்பாஃப்

இதயம் கொள்ளாது
என்னுள் பெருக்கெடுக்கும்
இந்த அன்பையும்,
அழகையும் கொண்டு
நான் யாதொரு
பிரமாண்ட சிலையையும்
வழக்க வேண்டாம்
வெளிப்படும் தூசு
மாசு உண்டாக்க வேண்டாம்.

– தேவதேவன்

விலகாத விசுவாசியாய்
உடன்வரும் என் நிழல்
சாம்ராட்டைப் போலவே
நடந்து செல்கிறேன்.
பணிந்து பின்னகரும்
இருபுறச் சுவர்களும்
மரம்செடி கொடிகளும்
ஆடி அசைந்து ஆமோதிக்கும்
நீண்டு கிடக்கும் நிலம்
குறுநகை உதிர்க்கும்
உதடுகளைக் கடந்தபடி
ஒரு சாம்ராட்டைப் போலத்தான்
நடந்து போகிறேன்.

– எம்.ராஜா

ஒரு மரத்திற்கு
அது விட்டிருக்கும் இலைகளின் எண்ணிக்கை தெரியுமா?
வானம் என்ற கண்ணாடியில்
தன்னைப் பார்த்துக்கொள்ளும் அபிலாஷை அதற்கு உண்டா?
மழை பெய்யும்போது என்ன நினைக்கிறது அது?
தன் குழந்தைகளைப் பறிக்கும் கரங்களைப் பற்றி
அதன் அபிப்பிராயம் என்ன?
நிலாக் காய்வதில் அதற்கு சந்தோஷம் உண்டா?
பறவைகளுக்கு என்ன சம்மதங்கள் அது அளித்திருக்கிறது?
எனக்குத் தெரியவில்லை....
வெட்கமாக இருக்கிறது எனக்கு.

– பசுவய்யா

# மொழி, இலக்கிய பண்பாட்டை பேணிப் பாதுகாக்க வேண்டும்

## — அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் —



(கொழும்பு)

நமது மொழி, கலை, இலக்கிய, பண்பாட்டுச் செல்வங்களை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும், பராமரிக்க வேண்டும், இவற்றை நாம் அடுத்த தலைமுறைக்கு பக்குவமாகக் கையளிக்க வேண்டும். அதற்கு கம்பன் விழா போன்ற தமிழ் விழாக்கள் எமக்குத் தேவை என மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் மன்னார் மறை மாவட்ட சமூகத்தொடர்பு அருட் பணிமையத்தின் இயக்குநருமான அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷனில் இடம்பெற்ற நான்கு நாள் கம்பன் விழாவின் இறுதி நாள் அமர்வில் கலந்துகொண்டு தொடக்கவுரை ஆற்றும்போதே அடிகளார் இவ்வாறு குறிப்பிட்டார்.

பெப்ரவரி மாதம் 22 - 25ஆம் திகதி வரையிலான நான்கு நாட்கள் நடைபெற்ற இவ்விழாவின் இறுதிநாள் அரங்கான குறள் அரங்கில் தொடக்கவுரையாற்றிய அடிகளார் உயிரை இழந்தோம் உரிமையை இழந் தோம் உணர்வை இழக்கலாமா? நாம் எல்லாவற்றையும் இழந்தா லும் நாம் இழக்க முடியாத செல்வங்கள் பல இன்னும் நம்மிடம் உள்ளன். அதுதான் நம்முடைய மொழி, அதுதான் நம்முடைய இலக்கியங்கள், அதுதான் நம்முடைய கலைகள், அதுதான் நம்முடைய பண்பாடுகள்.

தலைநகரிலே தனித்துவம் மிக்க தமிழ் அமைப்பாக, தலை நிமிர்ந்து நிற்பது கொழும்புக் கம்பன் கழகம். இது கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்க்கிறது. கொழும்புக் கம்பன் கழகம் எடுக்கும் இந்தக் கம்பன் விழா இன்றைய காலத்தின் கட்டாயத் தேவை. இது போன்ற விழாக்கள் மூலமாகத் தான் நாம் தமிழின் சிறப்பை உணர முடியும். தமிழராகிய நாம் நமது தனிப்பெருமை எத்தகையது என்பதைச் சிந்திக்க முடியும்.

இந்த விழா நம்மை நாமே திரும்பிப் பார்க்கின்ற விழா. நமது அருமை பெருமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து மகிழ்கின்ற விழா.

உலக வரலாற்றுப் பக்கங்களைத் திருப்பிப்பார்த்தால் ஒரு உண்மை நமக்குத் தெளிவாகும். அதாவது ஒரு இனத்தை அழிக்கவேண்டும் என்றால் எதிரிகள் முதலில் அந்த இனத்தில் மொழியை அழித்திருக்கின்றார்கள். மொழி அழிந்தால் ஒரு இனம் தானாகவே அழிந்துவிடும்.

மொழி என்பது ஆன்மா பயணிக்கும் பாதை. ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு தன் பண்பாட்டை எடுத்துச் செல்லும் வழி. தமிழர்களாகிய எம்மைப் பொறுத்தவரை தமிழ் மொழி என்பது எமது வெறும் "வழி" மட்டுமல்ல, அதுதான் நமது "விழி". ஏனென்றால் இரண்டாயிரம் ஆண்டுகால தமிழின் எழுச்சி, வீழ்ச்சி - வெளிச்சம், இருட்டு - மேடு, பள்ளம் இவற்றை உற்றுப்பார்த்தால் ஒரு உண்மை புலப்படும். தமிழனின் மொழிக்கு ஊறு நேர்ந்தபோதெல்லாம் அவனது அரசியல், பொருளாதார, பண்பாட்டின் அடித்தளங்கள் ஆட்டம்கண்டிருப்பதைப் பார்க்கின்றோம் எனத் தெரிவித்தார்.

# இலங்கையர் நாடுகடத்தல்; இடைநிறுத்தியது பிரிட்டன்

(கொழும்பு)

பிரித்தானியாவில் புகலிடம் கோரிய இலங்கையர்கள் சிலரை நாட்டிற்கு திருப்பியனுப்புவதை லண்டன் நீதிமன்றம் இடை நிறுத்தியுள்ளது. இந்தக் குழுவினரை நேற்று இலங்கைக்கு திருப்பியனுப்ப திட்டமிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீண்டும் நாட்டிற்கு திருப்பியனுப்பப்படும் பட்சத்தில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு இலக்காக நேரிடலாம் என இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் வாதிட்டனர். லண்டன் மேல்நீதிமன்றம் இலங்கையர்களை நாட்டிற்கு திருப்பி அனுப்புவதை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்ததையடுத்து, பிரித்தானியாவில் புகலிடம் கோரியுள்ள இலங்கையர்கள் தொடர்ந்தும் அந்த நாட்டில் தங்கியிருப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அத்துடன், அவர்கள் தொடர்பிலான விசாரணைகளும் பிரித்தானியாவில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, லண்டன் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானத்தையடுத்து தாங்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதாக பிரித்தானிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிலையம் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து மேன்முறையீடு தாக்கல் செய்வதற்கு எண்ணியுள்ளதாகவும் பிரித்தானிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# நிறுத்தல், அளவைக்கருவிகள்; முத்திரை இடாததால் தண்டம்

(மன்னார்)

மன்னாரில் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரை இடாத 16 பேர் தண்டம் செலுத்தியுள்ளனர். நிறுத்தல் அளவைக கருவிகளுக்கு முத்திரையிடாத 17 பேர்மீது மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் 16 வழக்குகளுக்கு தீர்ப்பளிக்கப்பட்டு 32,500 ரூபா அவர்களிடமிருந்து தண்டமாக அறவிடப்பட்டுள்ளதாக அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைத் திணைக்களத்தின் வவுனியா மற்றும் மன்னார் அலுவலக பொறுப்பதிகாரி பாலஸ்கந்தன் இராஜேஸ்வரன் தெரிவித்தார். கடந்த 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, நிறுத்தல அளவைக்கருவிகளுக்கு முத்திரையிடப்படாத வர்த்தக நிலையங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த நிலையில், மேற்படி வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகவே கடந்த செவ்வாய்க்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதன் போதே இவர்களிடமிருந்து 32,500 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையின்போதும் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடாத 17 வர்த்தக நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த 22ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதன்போது இந்த வர்த்தகர்களிடமிருந்து 42,000 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தம் அமையவில்லை

## — என்கிறது தமிழரசுக்கட்சி —

(யாழ்ப்பாணம்)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளும் 13 ஆவது திருத்தச் சட்டமும் இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கப் போவதில்லை என தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சில விடயங்களை நாமும் அரசாங்கத்திடம் கோரியுள்ளோம். இருப்பினும் இந்த அரசாங்கம் எமது கோரிக்கைகளுக்கோ அல்லது ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கோ ஒருபோதும் செவிசாய்க்கவில்லை" என்று தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் 13ஆவது திருத்தச் சட்டமும் இனப்பிரச்சினை தீர்வுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்ல. அதாவது, 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைகள் எங்களுடைய எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்துகொள்ளவில்லை. என்றாலும் கூட அதில் சில விடயங்கள் இருக்கின்றன.

தற்போது அரசாங்கம் கையாள்கின்ற உத்தி ஓர் தந்திரோபாயமான உத்தியாக நாங்கள் பார்க்கின்றோம். நாங்கள் வேண்டாம் என்று சொல்லும் விடயத்தினை நாங்கள் நீக்குவோம் என சொல்வதன் மூலமாக நாங்கள் அதை எடுத்துக் கொள்வோம்.

13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வோம் என்ற நிலைப்பாட்டினை கொண்டுள்ளது. எங்களைப் பொறுத்த வரையில் எதையும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய வகையில் எதுவும் அமுல் படுத்தப்பட வில்லை.

யாழ். மாவட்டத்தில் உள்ள 437 கிராம சேவை அலுவலர் கள் இருக்க வேண்டும். இருப்பினும் இதில் இன்னமும் 30 வீதமான வெற்றிடங்கள் இருக்கின்றன. அவற்றினை நிரப்புங்கள் மக்கள் கஷ்டப்படுகின்றார்கள் என்ற விடயம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடப் படுகின்றது.

அடிமட்ட சேவையாளர்களின் தேவை இருக்கின்ற போது. அந்த வெற்றிடங்களை நிரப்புமாறு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் இருக்கின்ற போதும், அவற்றினை நாங்களும் கேட்ட போது, அரசாங்கம் அவற்றினை செய்யவில்லை. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றார். (25)

# வடக்கு மக்களுக்கான உதவிகளை இயன்றவரை இந்தியா வழங்கும்

## — உதவித்தூதுவர் சுரேஸ்மேனன் —

வடபகுதி மக்களுக்கு இயன்ற வரை உதவிகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம் என யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் உதவித் தூதுவர் சுரேஸ் மேனன் தெரிவித்தார். அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நடைபெற்ற மாற்று வலுவுள்ளோரின் நாடக ஆற்றுகை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் எங்களை விட திறமையானவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு சிறந்த வழிகாட்டல்களுடன் அன்பும், அரவணைப்பும் இருக்குமானால் அவர்களால் பல சாதனை களை நிலைநாட்ட முடியும். இதற்கு பெற்றோர் ஆசிரியர்களின் வழிகாட்டல் முக்கியமானதாக அமைகின்றது இவ்வாறான மாற்றுத் திறனாளிகளின் ஆற்றல்களை வெளிப் படுத்துவதற்கு கலை முக்கிய பங்கை வழங்குகின்றது. குறிப்பாக சங்கீதம், சித்திரம், நடனம் போன்றன மாற்றுத் திறனாளிகளை ஆற்றல்படுத்த உதவுகின்றது. அத்துடன், மாற்றுத் திறனாளிகளின் முன்னேற்றத்திற்கு எல்லோரும் பங்காற்ற வேண்டும். வட பகுதியில் இந்தியா பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. இந்த விடயத்திற்கும் எம்மால் இயன்ற உதவிகளை வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (02)

# பூசணிக்காய் திருட்டு; இருவருக்கு விளக்கமறியல்

பட்டப்பகல் வேளையில் தோட்டத்துக்குள் புகுந்து பூசணிக்காய்களைத் திருடிய சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்த சம்பவமொன்று யாழ்ப்பாணம் - இணுவில், சிங்கத்தின் கலட்டி வீதியில் இடம்பெற்றுள்ளது. நண்பகல் வேளையில் தோட்ட வெளியில் உள்ள கள்ளுத் தவறணையின் முன்னால் லானட் மாஸ்ரர் ரக வாகனத்தை நிறுத்தி விட்டு தோட்டத்தில் உள்ள பூசணிக்காய்களைப் பறித்துக் கொண்டிருந்த சந்தேகநபர்கள் தொடர்பில் வழங்கப்பட்ட தகவலை அடுத்து அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார், இருவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டதை அடுத்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார்.

## இலங்கையின் பிரதான ஆறுகள். (முக்கியமான ஆறுகளில் சில இங்கு தரப்பட்டுள்ளன)

| | | | |
|---|---|---|---|
| 01. மகாவலி கங்கை | 02. ஜின் கங்கை | 03. கிரிந்தி ஓயா | 04. மாணிக்க கங்கை |
| 05. களனி கங்கை | 06. நில்வள கங்கை | 07. மீ ஓயா | 08. கும்புகன் ஓயா |
| 09. களு கங்கை | 10. தெதுறு ஓயா | 11. மாதுறு ஓயா | 12. பறங்கி ஆறு |
| 13. வளவ கங்கை | 14. கலா ஓயா | 15. கல்லோயா | 16. மல்வத்து ஓயா |

## இலங்கையிலுள்ள நதிகள், நீர்வீழ்ச்சிகள் பற்றிய தகவல்கள்

01. இலங்கையில் மிக நீளமான நதி - மகாவலி கங்கை
02. மகாவலி கங்கை எந்த மலையிலிருந்து ஊற்றெடுக்கின்றது? - சிவனொளிபாத மலை அண்டியுள்ள கற்றன் மேட்டுநிலத்தில்
03. நதிகள் கடலுடன் கலக்குமிடம் - கழிமுகம்
04. மகாவலி கங்கையின் நீளம் - 338 Km. இது முக்கோண வடிவில் அல்லது விசிறி வடிவில் காணப்படும்.
05. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடங்கள் - திருகோணமலை, கொட்டியாரக் குடா
06. நீரை வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்ல மனிதனால் வெட்டப்படுவது - வாய்க்கால்
07. மலைப்பகுதியில் இயற்கையாகத் தோன்றும் ஊற்று நீரை ஒன்றாகச் சேர்த்துப் பள்ளத்தாக்கு ஊடாகப் பாய்ந்து செல்வது - நதி, கங்கை, ஆறு
08. இலங்கையின் மிகப் பெரிய நீர்த்தேக்கம் - விக்டோரியா
09. ஆறுகள் ஆழமான பள்ளத்தாக்கில் செங்குத்தாகப் பாயும்போது தோன்றுவது - நீர்வீழ்ச்சி
10. இலங்கையில் மிகப்பெரிய நீர்வீழ்ச்சியான பம்பரகந்த அமைந்துள்ள மாவட்டம் - பதுளை
11. இலங்கையில் உள்ள அழகிய நீர்வீழ்ச்சிகள் - துன்கிந்த, தியலும
12. நீர்மின்சாரம் உற்பத்தியாக்கத்திற்குப் பயன்படும் நீர்வீழ்ச்சிகள் - அபர்டீன், லக்ஸபானா, விக்டோரியா
13. சிவனொளிபாத மலைப்பகுதியால் ஹற்றன் மேட்டுநிலத்தில் உற்பத்தியாகும் ஆறுகள் - மகாவலிகங்கை, களனி கங்கை, வளவ கங்கை
14. இலங்கையில் உள்ள நீர்த்தேக்கங்கள் - விக்டோரியா, கொத்மலை, உடவளவை, போவத்தன

## பிரதான ஆறுகளும் அவை கடலுடன் கலக்கும் இடங்களும்

| | | |
|---|---|---|
| 01 மகாவலி கங்கை | - | திருகோணமலை |
| 02. களு கங்கை | - | களுத்துறை |
| 03. களனி கங்கை | - | கொழும்பு |
| 04. வளவ கங்கை | - | அம்பாந்தோட்டை |
| 05. நில்வள கங்கை | - | மாத்தறை |



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013
பகுதி - I
1.30 மணி
# கல்வி முரசு
வெளியீடு 41



S.T.திலக்

01) கீழே தரப்பட்ட விபரணத்தை வாசித்து விடை தருக.

நீண்ட நேரம் பயணம் செய்த வயோதிபர் மிகவும் களைத்த நிலையில் காணப்பட்டார். அவர் தலையில் காணப்பட்ட கச்சான்கடலைக் கடகம்கூட அவருக்குப் பெரும் சுமையாகப்பட்டது. அவரின் மனம் ஆறுதலை விரும்பியது. பரந்து செழித்து வளர்ந்த ஆலமரநிழலை அடைந்ததும் "அப்பாடா" என்று ஓர் பெருமூச்சு விட்டபடி மரநிழலில் இருந்து நிலத்தில் தனது தலைப்பாகையைக் கழற்றி விரித்த வண்ணம் மனநிம்மதியோடு சாய்ந்தார். அந்த ஆலமரத்தை அண்ணாந்து பார்த்தபோது, அவரின் மனத்தில் பல காட்சிகள் கண்ணுக்குப் புலப்பட்டன. ஒரு காகத்தின் கூட்டையும், அதற்குள் இருந்த இரண்டு குஞ்சுகள் தாயைத்தேடிக் கத்திய வண்ணம் இருப்பதையும் கண்டார். சிறிது நேரத்தில் தாய்க் காகம் வந்து குஞ்சுகளுக்கு உணவு ஊட்டியது. இப்படியான பல காட்சிகளைக் கண்ட வயோதிபர், சுதந்திரமாக வாழும் பறவைகளைப் பார்த்து மனநிம்மதியடைந்து தனது பயணத்தை ஆரம்பித்தார்.

1. இப்பந்தியில் விபரிக்கப்பட்டவர் யார்?
.................................................................
2. ஆலமரத்தடிக்கு அவர் ஏன் வந்தார்?
.................................................................
3. ஆலமரம் எப்படி வளர்ந்திருந்தது?
.................................................................
4. வயோதிபர் ஆலமரத்தில் எதனை அவதானித்தார்?
.................................................................
5. குஞ்சுகள் ஏன் கத்தியன?
.................................................................
6. பின்வரும் சொற்களுக்கு ஒத்தசொல் தருக.
   1. பயணம் : ..............................    2. நிலம் : ..............................
7. பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் தருக.
   1. வயோதிபர் : ..............................    2. நீண்ட : ..............................
8. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.
   1. சுமை : .................................................................
   2. குஞ்சுகள் : .................................................................
9. இப்பந்தியில் இருந்து இரண்டு பெயர்ச் சொற்களை எழுதுக.
   (..............................)    (..............................)
10. இப்பந்தியில் இருந்து இரண்டு வினைச் சொற்களை எழுதுக.
   (..............................)    (..............................)
11. ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
   1. She ..............................    2. Our book ..............................

**02) கீழே தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் குறிப்பிடுக.**

1. சாதாரண கடிதத்தை அஞ்சலில் அனுப்ப ரூபா.5.00 முத்திரை ஒட்ட வேண்டும். (..............)
2. விமானங்கள் எரிபொருளில் இயங்குவதில்லை. (..............)
3. பூக்கள் அனைத்தும் காலையில் மலர்ந்து விடும். (..............)
4. மழை வருவதற்கு முன் பல அறிகுறிகளை நாம் முதலிலேயே அறிந்துகொள்ளலாம். (..............)
5. ஓரங்க நாடகத்திற்குத் திரை மூடுவது இல்லை (..............)

**03) மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. உலகிலுள்ள உயிருள்ள அங்கிகளைத் தாவரம், விலங்கு என வகைப்படுத்தலாம். வகைப்படுத்தல் என்பதன் பொருள்
   1) பாகுபடுத்தல் 2) தரம்பிரித்தல் 3) வேறாக்குதல் 4) தொகுத்தல்
2) இலங்கையில் மாணிக்க கங்கையின் அருகில் அமைந்துள்ள புராதன நகரம் கதிர்காமம். புராதன என்பதன் பொருள்
   1) நவீனம் 2) தொன்மை 3) புதுமை 4) சங்ககாலம்
3) இரவு வானில் விண்மீன்கள் மிகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். **விண்மீன்** என்பதன் ஒத்தபொருள் தரும் சொல்
   1) தாரகை 2) அம்புலி 3) கதிரவன் 4) சுக்கிரன்
4) நாம் தினமும் கடவுளை சிரம் தாழ்த்தி வணங்க வேண்டும். சிரம் என்பதன் ஒத்தபொருள் தரும் சொல்
   1) குனிந்து 2) நிமிர்ந்து 3) தலை 4) உடம்பு
5) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். என்பதில் முயற்சி என்பதன் ஒத்தபொருள் தரும் சொல்
   1) அடக்கம் 2) பணிவு 3) உயர்ச்சி 4) ஊக்கம்
6) இயற்கை அன்னை அளித்த கொடைகளில் நீர் வளம் முக்கிய ஒன்றாகும். நீர் என்பதன் ஒத்த பொருள் தரும் சொல்
   1) திரவம் 2) திட்பம் 3) புனல் 4) பொய்கை
7) மாணவரின் அறிவுப் பசிக்கு வழிகாட்டுதல் ஆசிரியரின் முக்கிய பணியாகும். பணி என்பதன் ஒத்தபொருள் தரும் சொல்
   1) கடமை 2) உதவுதல் 3) கற்பித்தல் 4) கீழ்ப்படிதல்
8) கிழக்கு மாகாண மக்களை சிக்குன்குனியா என்ற நோய் மிகவும் வதைக்கிறது. நோய் என்பதன் ஒத்த பொருள் தரும் சொல்
   1) அச்சுறுத்தல் 2) துயர் 3) பிணி 4) இடர்

**04) பின்வரும் சொற்களில் ஒரு சோடிச் சொற்கள் எதிர்க்கருத்தைத் தரும் அச் சொல்லின் கீழ் கோடிடுக.**

1) காடு, வனம், நாடு, பொழில்
2) கங்குல், இரவு, மதியம், பகல்
3) கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்
4) மேதை, அறிவாளி, அறிவிலி, பேதை
5) ஆதி, தொடக்கம், முடிவு, ஆரம்பம்
6) இளமை, புதிது, முதுமை, வன்மை
7) சரி, கழி, பிரி, பிழை
8) சமர்த்து, அசடு, தலை, முண்டம்

**05) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) "தயவு" என்பதை விளக்கும் இன்னுமொரு இணைமொழி எது?
   1) ஈவிரக்கம் 2) அருமை பெருமை
   2) பாரதூரம் 4) அணைதுணை
2) "மிகவும் வறியவர்" என்பதை விளக்கும் இன்னுமொரு இணைமொழி எது?
   1) அருமை பெருமை 2) ஏழை எளியவர்
   3) இன்ப துன்பம் 4) அணைதுணை



## பொதுவாக அறிந்திருக்க வேண்டிய சில விடயங்கள்

| | |
|---|---|
| 01. இலங்கையின் தேசிய மிருகம் எது? | - மர அணில் |
| 02. இலங்கையின் தேசிய பறவை எது? | - காட்டுக்கோழி |
| 03. இலங்கையின் தேசிய மலர் எது? | - நீலோற்பலம் |
| 04. இலங்கையின் தேசிய மரம் எது? | - நாகமரம் |
| 05. இலங்கையின் தேசிய விளையாட்டு எது? | - கரப்பந்தாட்டம் |
| 06. இலங்கையின் நீளமான நதி எது? | - மகாவலி கங்கை |
| 07. இலங்கையின் மிக உயரமான மலை எது? | - பீதுறுதாலகால மலை |
| 08. இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற் பூங்கா எது? | - பேராதனைப் பூங்கா |
| 09. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் | - திருகோணமலை |
| 10. இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது? | - பாக்குநீரிணை |
| 11. இலங்கையில் அமைந்துள்ள செயற்கைத் துறைமுகம் எது? | - கொழும்பு |
| 12. இலங்கையில் விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது? | - வில்பத்து |
| 13. இரத்தினக் கல் அதிகளவு கிடைக்கும் இடம் எது? | - இரத்தினபுரி |
| 14. இலங்கையின் அதியுயர்ந்த நீர்வீழ்ச்சி எது? | - பம்பரகந்த |
| 15. கறையானால் அரிக்கப்படாத தாவரம் எது? | - தேக்கு, வேம்பு |
| 16. அழகிய கூடு கட்டும் பறவை எது? | - தூக்கணாங் குருவி |
| 17. பறக்க முடியாத பறவை எது? | - தீக்கோழி |
| 18. மிகப்பெரிய முட்டையிடும் பறவை எது? | - தீக்கோழி |
| 19. மிகச்சிறிய முட்டையிடும் பறவை எது? | - தேன்சிட்டு |
| 20. பாலைவனக் கப்பல் எனப்படும் மிருகம் எது? | - ஒட்டகம் |
| 21. மிகச் சிறிய இலையுடைய தாவரம் எது? | - நெப்பந்திசு |
| 22. உயரமான விலங்கு எது? | - ஒட்டகச் சிவிங்கி |
| 23. வேகமாகப் பறக்கும் பறவை எது? | - பாடும் பறவை |
| 24. மிக வேகமாகத் தரையில் ஓடும் விலங்கு எது? | - சிறுத்தைப் புலி |
| 25. உலகின் மிகப் பெரிய கண்டம் எது? | - ஆசியாக் கண்டம் |
| 26. உலகின் நீளமான நதி எது? | - நைல் நதி |
| 27. உலகின் மிகப்பெரிய பாலைவனம் எது? | - சகாராப் பாலைவனம் |
| 28. உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரம்? | - எவரெஸ்ட் |
| 29. உலகின் அதிகளவு மக்கள் தொகை கொண்ட நாடு | - சீனா |
| 30. உலகிலேயே குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நாடு | - வத்திக்கான் நகரம் |
| 31. உலகிலேயே மிகச் சிறிய கண்டம் | - அவுஸ்ரேலியா |
| 32. பூமிக்கு மிக அருகில் உள்ள கோள் எது? | - வெள்ளி |
| 33. பூமிக்கு மிகத் தொலைவில் உள்ள கோள் எது? | - புளூட்டோ |
| 34. மிகப்பெரிய கோள் எது? | - வியாழன் |
| 35. ஒளி மிகுந்த கோள் எது? | - வெள்ளி |
| 36. மிகச் சிறிய கோள் எது? | - புதன் |
| 37. சமுத்திரங்களில் மிக ஆழமானது எது? | - மரியானா ஆழி |
| 38. மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? | - மைக்கல்பரடே |
| 39. வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்? | - மார்க்கோனி |
| 40. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர்? | - அலெக்சாண்டர் கிரகாம் பெல் |
| 41. மோட்டார்க் காரைக் கண்டுபிடித்தவர் யார்? | - புல்மன் |
| 42. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்? | - தோமஸ் அல்வா எடிசன் |

# தமிழக அமைச்சரவையில் எட்டாவது தடவையாக மாற்றம்



(சென்னை)

எட்டாவது தடவையாகவும் தனது அமைச்சரவையை மாற்றம் செய்துள்ளார் முதல்வர் ஜெயலலிதா. இதில் மூவரின் அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளதுடன் வேறு சிலரது இலாகாக்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இதன் படி அமைச்சரவையில கோகுல இந்திரா, என்.ஆர்.சிவபதி, டாக்டர் விஜய் ஆகியோரின் அமைச்சுப் பதவிகள் மற்றும் கட்சியில் அவர்கள் வகித்த பதவிகளையும் ஜெயலலிதா பறித்துள்ளார்.

கோகுல இந்திரா அதிமுக மகளிர் அணி செயலாளராக இருந்தார். திருச்சி புறநகர் மாவட்ட பொறுப்பு வகித்தவர் என்.ஆர்.சிவபதி. வேலூர் மாவட்ட செயலாளராக இருந்தவர் டாக்டர் விஜய்.

கோகுல இந்திரா சுற்றுலாத் துறையை கவனித்து வந்தார். இவர் சென்னை அண்ணா நகரில் இருந்து எம்எல்ஏவாக தேர்வு செய்யப்பட்டவர்.

பள்ளிக்கல்வி, சட்டம் உள்ளிட்ட துறைகளை கவனித்து வந்தவர் என்.ஆர்.சிவபதி. இவர் திருச்சி மாவட்டம் முசிறி தொகுதியில் தேர்வு செய்யப்பட்டவர்.

வேலூர் தொகுதியில் இருந்து எம்.எல்.ஏவாக தேர்வு செய்யப்பட்டவர் டாக்டர் விஜய். இவர் சுகாதாரத்துறையை கவனித்து வந்தார்.




பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறைகளின் அமைச்சராக, அருப்புக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வைகைச் செல்வன் நியமிக்கப்பட்டுள்ளார். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் கே.சி.வீரமணி நியமிக்கப்பட்டுள்ளார்.

காதி, கிராமத் தொழில்கள் வாரிய அமைச்சராக, மணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் பூனாட்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதவிர, சில அமைச்சர்களின் இலாகாக்களும் மாற்றப்பட்டுள்ளன. இதேவேளை புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூவரும் நேற்றைய தினம் தமது அமைச்சுப்பதவிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

# முகேஷ் அம்பானி மீதுதாக்குதல் இந்திய முஜாஹிதீன் மிரட்டல்

முகேஷ் அம்பானிமீது தாக்குதல் நடத்தவுள்ளதாக இந்தியன் முஜாஹிதீன் அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது. கடந்த 24ஆம் திகதி ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் தலைவர் முகேஷ் அம்பானியின் அலுவலகத்திற்கு வந்த மர்ம நபர் ஒருவர் அங்குள்ள ஊழியரிடம் கவரொன்றை கொடுத்து விட்டுச் சென்றார்.



நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் 2013-14ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்ய வந்த நிதிஅமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் துறையின் இராஜாங்க அமைச்சர்கள் நமோநாராயண் மீனா, பழனி மாணிக்கம் ஆகியோரைக் காணலாம்.

அதைப் பிரித்துப் படித்துப் பார்த்தபோது இந்தியன் முஜாஹிதீன் அமைப்பு முகேஷ் அம்பானிக்கு மிரட்டல் விடுத்துள்ளமை தெரிய வந்தது.

முகேஷ் குஜராத் முதல்வர் மோடியை ஆதரிப்பது மற்றும் குஜராத்தில் முதலீடு செய்வதை நிறுத்திக் கொள்ளாவிட்டால் அவரையும், அவரது 27 அடுக்குமாடி வீடான ஆன்டில்லாவையும் தாக்கப் போவதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தங்கள் கூட்டாளியான டேனிஷ் என்பவரை விடுதலை செய்யாவிட்டால் முகேஷ் அம்பானிக்குதான் கேடு என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடித விவகாரம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள டேனிஷ் பீகார் மாநிலம் தர்பங்காவைச் சேர்ந்த முகமது டேனிஷ் அன்சாரி ஆகும்.

பட்கலின் சகோதரர்கள் பாகிஸ்தான் தப்பிச் செல்லும் முன்பு தனது வீட்டில் அடைக்கலம் கொடுத்ததற்காக டேனிஷ் கைது செய்யப்பட்டார்.

பொறாமை....
(5ஆம் பக்கதொடர்ச்சி...)

ஒரு வேறு வகை அறிவு சார் இனத்தால் நம்மவர்கள் சூழப்பப்பட்டு, அசௌகரியத்தின் புள்ளிக்கு நகர்த்தப்படுவது உறுதியாகும் பட்சத்தில், 'சாத்தானே என்னை எடுத்துக் கொள்' அந்த எதிரி எத்துணை அறிவாளியாக, புகழ்பெற்றவ னாக இருந்தபோதும் என்னை தற்காத்துக் கொள்ள அனைத்து வகையிலும் எனக்கு உரிமையுண்டு... பத்து வருடம் கழித்து அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்று, "ஏன் யூதர்களின் புத்திசலித்தனமான உடனடிப் பதிலகள் எரிச்சலைக் கிளப்புகின்றன?". பதில் அளித்தவர் இப்படிச்சொன்னார்: "யூதர்கள் வாயைப் பொத்திக்கொண்டு இருக்க முடியுமானால் யூத-எதிர்ப்பென்பதே இருக்காது. தாங்கள் வாயை பொத்திக் கொண்டு இருப்பதைத் தவிர அவர்களால் மற்ற அனைத்தையும் செய்யமுடியும்'' தன் காலத்தில் மிகப் பரவலாக வசிக்கப்பட்ட இந்த தத்துவஞானி, ஜேர்மனியர்களின் மௌனத்தை தலைசிறந்த குணமாக முன்மொழிய பின்வரும் வார்த்தைகளை உபயோகித்தார்: 'கருணை', 'உயர்குலத்தின் இயல்பு', "மேன்மை நிரம்பியது" மற்றும் "ஆழம் கொண்டது''.

ஸீக்பிரீட் லிஸ்டென்ஸ்டெயிட்டர் (Siegfried Lichtens taedter) நாஜி கட்சியை சமூக முன்னேற்றத்திற்கான கட்சி என்று வர்ணித்தார். ஸீக்பிரீடை பொறுத்தவரை யூத-எதிர்ப்பு, சமூகப் பொறாமை, போட்டி மற்றும் சமூக இலட்சியம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டது. யூதர்கள் வேறு யாரை விடவும் "அளவுக்கதிகமான மகிழ்ச்சி"யுடன் இருப்பதாக பிறருக்கு தோன்றினால், "அந்த எண்ணமே (யூதர்கள் மீது) பொறாமை மற்றும் கசப்பிற்கான பொதுக் காரணமாக இருக்கக் கூடாதா? மேலும், ஒருவர் மனதிலும் மூளையிலும், தங்கள் எதிர்காலம் குறித்து கவலையும், வருத்தங்களும் நிறையும் போது இது சாத்தியமே. தனிமனித உறவுகளில் கூட இது அடிக்கடி நடப்பது தானே?"

தனி மனிதனை அரித்துத் தின்னும் பொறாமையை, அவன் தனக்கும் பிறரிடத்தும் மறைக்கும்போது அது சக மனிதர்களிடம் பரவியிருக்கும் ஒரு கூட்டுக் கனவாகி, அவர்களை இனவாதத்திற்கு இட்டு சென்றது. தங்களைக் குறித்து தாங்களே மகிழ்ந்திராத ஒடுக்கப்பட்ட ஜேர்மனியர்களுக்கு இந்த இன வாதம் ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. மந்தமான (maladroit) கிறிஸ்தவ மாணவர்கள், சிந்திக்கத் தெரியாத விற்பனையாளர்கள் மற்றும் தப்புக் கணக்கு போட்ட தொழில் முனைவர்கள் யூதர்களின் தொடர்ந்த வளர்ச்சி குறித்து குற்றம் சொல்லிக் கொண்டே இருக்க முடியவில்லை. இது தார்மீக உணர்வுக்கு உவப்பானதாகவுமில்லை. தோல்வி குறித்த பயத்தை அதிகரிக்கவும் செய்தது. அதனால், தங்கள் பொறாமையையும், யூத-எதிர்ப்பையும், இன அவதூறாக மாற்றிக் கொண்டனர்.

இந்த இன வாதக் கோட்பாடு, தங்களைக் குறித்து சந்தேகமும், தாழ்வுணர்ச்சியும் கொண்டிருந்த பலவீனமான ஜேர்மானியர்களை, தாங்கள் ஒரு வலுவான மற்றும் உயர்ந்த அறிவுஜீவிகளாகக் கற்பனை செய்துகொள்ளும் கூட்டத்தினராக மாற்றியது. இனவாதம் என்பது பலவீனத்தால் உந்தப்பட்டு மந்தைக்குள் சென்று சேர்வதன்றி வேறல்ல.

## கிறிஸ்தவ நற்சிந்தனை
## பொறுப்பு ஒரு வெகுமதி

(மத்தேயு 21:33 - 43, 45 - 46.)

இன்றைய நற்செய்திப் பகுதியில் கொடிய குத்தகைக்காரர் உவமை கூறப்பட்டுள்ளது. அவ் உவமை எமது வாழ்வையும், எமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களையும் மீள்பார்வை செய்ய அழைக்கின்றது.

உவமையில் கடவுளின் நிலையை உற்றுநோக்கும் போது, தோட்டச் சொந்தக்காரன் தன் தொழிலாளர்களை நம்பி தன் தோட்டத்தைப் பொறுப்புக்கொடுக்கின்றான். அந்தப் பொறுப்பைக் கடமையுணர்வோடு நிறைவேற்றுவது முறையல்லவா?

இங்கு சிந்திக்க வேண்டிய விடயம் கடவுள் எமக்குப் பொறுப்பைத் தருவதுடன், அதனை நிறைவேற்ற வசதி வாய்ப்புக்களையும தருகின்றார். அதனைத் துஷ்பிரயோகம் செய்தல் இறைநீதிக்கு அடுக்காது.

உவமையில், தொழிலாளர்களுக்கு தாம் விரும்பியது போல தொழில் செய்ய சுதந்திரம் கொடுக்கப்படுகின்றது. ஆனால், அந்த சுதந்திரம் பேராசையாக மாறுகின்றது. எமக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை எதற்குப் பயன்படுத்துகின்றோம்.

பொறுப்பைத் தந்த இறைவன் ஒருநாள் எம்மிடம் கணக்குக் கேட்பார். அதற்குப் பதில் கூறித்தான் ஆகவேண்டும். அதில் இருந்து தப்பிக்க முடியாது. இறுதியாக இந்த உவமையில் இயேசுவின் தியாகம் கூறப்படுகின்றது.

அந்த இயேசுவே எமது வாழ்வுக்கு ஊற்று. அவரிடம் காணப்பட்ட தியாகம், அர்ப்பணம் எம்மிடம் உண்டா?

- வி.பி.தனேந்திரா.

முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர்: அ.மிருஷன்
வேவில், மட்டுவில் மத்தி,
மட்டுவில்.
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.
அகவை 03இல்

முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர்: ச.திலாளா
பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய்.
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.
அகவை 01இல்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................
முகவரி : ....................................
பிறந்த ஆண்டு : ....................................
கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்
....................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# உலக நாடுகளுக்கு உத்தரவிட அமெரிக்காவினால் முடியாது

## புதிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

உலகின் பலம் மிக்க நாடாக அமெரிக்கா உள்ள போதிலும் உலகநாடுகளுக்கு உத்தரவிட முடியாதென அந்நாட்டின் புதிய பாதுகாப்பு அமைச்சர் சக்ஹேகல் தெரிவித்துள்ளார். அமெரிக்க பாதுகாப்புத் துறையின் புதிய அமைச்சராக சக் ஹேகல் நேற்று முன்தினம் பதவி ஏற்றார். பின்னர் பென்டகனில் பணிபுரிபவர்களுக்கு உரையாற்றியவேளையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் கூறியதாவது;

நாம் உலகின் பலம் மிக்க நாடாக இருக்கிறோம். அந்தப் பலத்தை எப்படி பயன்படுத்தப் போகிறோம் என்பதே முக்கியம். நாம் மற்ற நாடுகளுக்கு உத்தரவிட முடியாது. நட்பு நாடுகளுடன் இணைத்து, தலைமை ஏற்று செயற்பட வேண்டும். அமெரிக்காவைத் தவிர வேறு எந்த நாடும் இதனை தனியாகச் செய்ய முடியாது. மற்ற நாடுகளை நாம் புத்திசாலித்தனமாக வழிநடத்த வேண்டும். நமது நாட்டிற்காகவோ, நமது நட்பு நாடுகளுக்காகவோ வளங்களைப் பயன்படுத்தும் போது புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டும்.

நாம் தவறுகளைச் செய்துள்ளோம். நாம் மேலும் தவறுகள் செய்யலாம். ஆனால் நம் செயற்பாடுகள் அனைத்தும் நன்மையை மனதில் கொண்டே இருக்க வேண்டும். இதை நாம் மறந்து விடக்கூடாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# செவ்வாய்க் கிரகத்தில் தேனிலவு புதுமண ஜோடிக்கு வாய்ப்பு



செவ்வாய் கிரகத்துக்கு புதுமண ஜோடி தேனிலவு செல்லும் சுற்றுலாத் திட்டத்தை தனியார் நிறுவனம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த டென்னிஸ் டிட்டோ என்ற விண்வெளி சுற்றுலா நிறுவனம் எதிர்காலத்தில் விண்வெளிக்கு மனிதன் சுற்றுலா செல்லும் திட்டத்தை ஏற்கனவே அறிவித்தது. இதற்கான ஒப்பந்தத்தை நாசாவுடன் இணைந்து செய்துள்ளது. இன்னும் 2 ஆண்டுகளில் இது தொடங்கும் என்று அறிவித்தது.

தற்போது செவ்வாய்க்கிரகத்தில் தேனிலவு செல்லும் திட்டத்தையும் அது அறிவித்துள்ளது. இதில் திருமணமான தம்பதி பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவித்துள்ளது. மொத்தம் 501 நாட்கள் பயணம். இதற்கான செலவு ரூ.. 5,400 கோடி என்றும் இன்னும் 5 வருடத்தில் இந்த திட்டம் தொடங்கும் என்றும் அதன் அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதற்கு தேர்வு செய்யப்படும் தம்பதிக்கு விண்வெளிப்பயணம் பற்றிய பயிற்சி அளிக்கப்படும். அதன் பிறகு செவ்வாய்க் கிரகத்துக்கு பயணம் தொடங்கும்.

# பூமியைத் தாக்கவுள்ள ராட்சத விண்கல்

விண்வெளியில் உள்ள விண்கற்கள் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் வேளையில், 325 மீற்றர் அகலமுடைய ராட்சத விண்கல் ஒன்று பூமியைத் தாக்க வாய்ப்புள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

99942 அபோபிஸ் என பெயரிடப்பட்டுள்ள விண்கல் ஒன்று 2068 ஆம் ஆண்டு பூமியைத் தாக்கக்கூடுமென அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா தெரிவித்துள்ளது.




சுமார் 325 மீற்றர் அகலம் கொண்ட இந்த ராட்சத விண் கல் கடந்த 2004 ஆம் ஆண்டு விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த விண்கல்லை கவனமாக கண்காணித்து வந்த விண்வெளி ஆய்வாளர்கள் இந்த விண்கல் 2029 மற்றும் 2036 ஆம் ஆண்டுகளில் பூமிக்கு அருகில் வரும் என்றும் இதனால் பூமிக்கு எந்தப் பாதிப்பும் வராது என்றும் கண்டறிந்தனர்.

ஆனால் 3ஆவது முறையாக 2068ஆம் ஆண்டு இந்த ராட்சத விண்கல் பூமிக்கு அருகில் வரும் போது இது பூமியை தாக்கும் சாத்தியக் கூறுகள் மிக அதிகமாக உள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. அண்மையில் பூமியை நோக்கி வந்த விண்கல் ஒன்று ரஷிய நாட்டு பகுதியில் விண்ணில் சிதறியதால் ஆயிரத்திற்கும் மேற்பட் டோர் காயமடைந்ததும், பெரும் பொருட்சேதம் ஏற்பட்டதும் குறிப் பிடத்தக்கது.

# சிங்கங்களின் தாக்குதலில் இருந்து மாடுகளை காக்கும் கென்ய சிறுவன்



(நைரோபி)

சிங்கங்களின் தாக்குதலில் இருந்து, பண்ணை மாடுகளை காப்பாற்ற, கென்ய சிறுவன், தந்திரமான வழியை கையாண்டு வருகிறான்.

கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில் விலங்குகள் பூங்கா உள்ளது. இந்நகரில், பெரிய கட்டடங்களை கொண்ட பகுதிகளில் கூட, சிங்கம், காண்டா மிருகம் உள்ளிட்ட வனவிலங்குகள் நடமாடும். நகருக்குள வரும், சிங்கங்கள் அங்குள்ள பண்ணைகளில் புகுந்து, ஆடு, மாடுகளை சாப்பிட்டு விடுகின்றன. நைரோபியைச் சேர்ந்தவன் ரிச்சர்ட டுரேரே, சிங்கங்களிடம் இருந்து, கால்நடைகளைக் காப்பாற்ற, தந்திரமான வழியை கையாண்டு அனைவரின் கவனதையும் ஈர்த்துள்ளான்.

இது குறித்து ரிச்சர்ட் கூறியதாவது; இரவில் நாங்கள் தூங்கும் சமயத்தில், பண்ணைக்குள் நுழையும் சிங்கங்கள், மாடுகளைக் கொன்று தின்று விடும். ஒரு முறை கையில் டோர்ச் லைட்டுடன் நான் பண்ணைக்கு அருகில் சென்றபோது, சிங்கங்கள் வெளிச்சத்தை கண்டு பயந்து ஓடுவதைக் கண்டேன். அசையும் விளக்கு வெளிச்சங்கள், சிங்கங்களை மிரட்டும் என்பதைக்கண்டு பிடித்தேன். அதன்பின், பண்ணையை சுற்றிலும், விளக்குகளைப் பொருத்தி, அவை அவ்வப்போது அணைந்து எரிவது போல, அவற்றுக்கு மின் இணைப்பு கொடுத்தேன். எனது ஐடியா வெற்றிகரமாக வேலை செய்தது. அதன்பிறகு, சிங்கங்கள், எங்கள் பண்ணைக்கு அருகே வருவதில்லை.

இவ்வாறு ரிச்சர்ட் கூறினான். சிறுவனின் புத்தி சாலித்தனத்தை பாராட்டி, அமெ ரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்ள அவனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# ஒபாமா தலைமுடி நரைப்பு காரணம் கண்டறிந்த் மிஷல்




எனது கணவரின் தலைமுடி நரைத்துப் போனதற்கு, மகள்கள் தான் காரணம் என ஒபாமாவின் மனைவி தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் அதிபராக இரண்டாவது முறையாக பதவி ஏற்றுள்ள ஒபாமாவின் தலைமுடி நரைத்திருப்பது அண்மையில் அவரது படங்களில் தெரிகிறது. இதற்கு காரணம் என்ன என்பது குறித்து மனைவி மிச்சேல் ஒபாமா ஒரு பேட்டியில் கூறியதாவது;

அனைவரும் நினைப்பது போல், அதிபர் பதவியின் சுமை காரணமாக என் கணவரின் தலைமுடி நரைக்கவில்லை. தலை நரைப்பதற்கு இரு மகள்கள் தான் காரணம்.அவர்கள் தற்போது இளம் வயதை அடைந்துள்ளனர். மூத்தவளுக்கு 14 வயது இளையவளுக்கு 11. அவர்கள் அணியும் உடை என் கணவருக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பார்ட்டிகளில் கலந்து கொள்ள அவர்கள் கவர்ச்சியாக உடையணிந்து செல்கையில் அவர் முகமே மாறி விடும்.என்ன உடை இது? என்பது போல், அவர் முகபாவணை இருக்கும்.இவ்வாறு, மிச்சேல் ஒபாமா கூறினார்.

# அமெரிக்க மையப்பகுதியை அணுகுண்டால் தாக்குவோம்

## – எச்சரிக்கிறது வடகொரியா



அமெரிக்காவின் மையப்பகுதியையும் அணுகுண்டால் தாக்கமுடியுமென வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது. சீனா அருகே உள்ள வடகொரியாவும், தென் கொரியாவும் பகை நாடுகளாக உள்ளன. தென்கொரியாவுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது.

இந்நிலையில் அமெரிக்காவை மிரட்டும் வகையில் வடகொரியா சமீபகாலங்களாக ஆயுதங்களை தயாரித்து வருகிறது. வடகொரிய மண்ணில் இருந்து ஏவுகணை மூலம் அமெரிக்காவை தாக்குவதற்கு திட்டம் தயாரித்து ஏவுகணைகளை உருவாக்கி வருகிறது.

கடந்த டிசம்பர் மாதம் வடகொரியா ஏவுகணை சோதனை ஒன்றை நடத்தியது. இந்த ஏவுகணை 10 ஆயிரம் கிலோமீற்றர் வரை பாய்ந்து சென்று தாக்கும் திறன் கொண்டது என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

2 வாரங்களுக்கு முன்பு வடகொரியா அணுகுண்டு சோதனை ஒன்றையும் நடத்தியது. இந்த ஏவுகணை மூலம் அமெரிக்கா மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்த முடியும் என்று கருதப் படுகிறது.

இதுதொடர்பாக வடகொரிய அரச இணையத்தளம் ஒன்றில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது;

அமெரிக்காவின் மேற்கு கடற்கரைப் பகுதி மட்டுமல்ல அமெரிக்காவின் மையப்பகுதியிலும் எங்களால் அணுகுண்டு தாக்குதல் நடத்த முடியும். அந்த தொழில்நுட்பங்களை நாங்கள் பெற்றுவிட்டோம். எங்களிடம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையும், அணுகுண்டும் உள்ளது. ஆயுத பலம் உள்ள சுதந்திர நாடாக நாங்கள் இருக்கிறோம். எந்த நாடாலும் எங்களை அச்சுறுத்த முடியாது என அதில் கூறப்பட்டுள்ளது.

# மயக்கமருந்து கொடுத்தபின் பொலிஸார் சுட்டுக்கொலை

## - ஆப்கானில் தீவிரவாதிகள் அதிரடி

ஆப்கானில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 11பொலிஸ் அதிகாரிகள் உட்பட 17பேர் உயிரிழந்துள்ளனர்.ஆப்கானிஸ்தான் நாட்டின் மத்திய கிழக்கில் அமைந்துள்ள காஸினி மாகாணம், தலிபான்கள் மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியாகும்.

இங்கு பொலிஸார் தங்கியிருந்த இடத்திற்குள் மறைமுகமாக உட்புகுந்த தலிபான் தீவிரவாதிகள், அங்கிருந்தோருக்கு மயக்க மருந்து கொடுத்திருக்கின்றனர். பின்னர் அவர்கள் மயங்கிய வேளையில், அனைவரையும் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்ற பின்னர் தப்பிச் சென்றுள்ளனர். இதில் 11 பொலிஸார் உடபட 17 பேர் கொல்லப்பட்டனர்.பின்னர் அங்கு வந்த காவலர்கள், சடலத்தை மீட்டு, கவனக்குறைவாக இருந்த காவலர்கள் இருவரை கைது செய்தனர். இந்த தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

# யாழில் நீர்வளப் பாதுகாப்பு புதிய செயற்திட்டம் அமுல்

தீவகம் உள்ளிட்ட யாழ். குடாநாட்டின் நீர், நில வளங்களைப் பாதுகாப்பதுடன் அதனூடாக வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவது தொடர்பில் துறைசார்ந்தோருடனான விசேட கலந்துரையாடலொன்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போது தீவகம் உள்ளிட்ட குடாநாட்டின் மண்வளத்தை ஆராய்ந்து அதன்பிரகாரம் அந்தந்தப் பகுதிகளில் அவ்வகையான பயிர்ச் செய்கையினை மேற்கொள்ளலாம் என்பதுடன், இருக்கின்ற நீர் வளங்களைப் பாதுகாப்பதுடன் அவற்றை மாசடையாது பாதுகாத்துக் கொள்வது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், நன்நீருடன் உவர்நீர் கலக்காமல் பாதுகாக்கும் பொருட்டும் மழை காலங்களில் நீர் நிலைகளில் நீரைத் தேக்குவது தொடர்பிலும் மற்றும் குளங்கள் மற்றும் வாய்க்கால்களினது புனரமைப்பு தொடர்பாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே மண் மற்றும் நீர் வளங்களின் ஆராய்ச்சிகள் நடைபெற்று வரும் நிலையில், யாழ்.குடாநாட்டிலும் அதனை மேற்கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மழை காலங்களில் மழை நீரை சேகரிப்பதனூடாக மழையில்லாத காலப்பகுதிகளில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இது தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் இதனூடாகவே விவசாயம் மேலும் வளர்ச்சி காண முடியுமென்றும் தெரிவித்ததுடன், குடாநாட்டிலுள்ள தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் அதேவேளை, அரசிடமிருந்து விசேட நிதியைப் பெற்று புல் மற்றும் மரங்களை நடுகை செய்வது தொடர்பிலும் இதனூடாக இயற்கை சமநிலையடையுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன், தீவகத்தின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்ட அமைச்சர், வேலணை சாட்டிப் பகுதியில் பிரதேச சபை மூலம் பொதுக்கிணறு ஒன்றை அமைத்து அத னூடாக பொதுமக்களுக்கான குடிநீர் தேவையை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

இதனிடையே தீவகத்தின் அபிவிருத்திக்கென மூன்று பிரதேச சபைகளுக்கும் தலா 100 மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கப்பட்ட நிலையில் அந்நிதிகளைக் கொண்டும் நீர் மற்றும் நில வளங்களைப் பாதுகாக்கும் திட்டங்களை உள்ளடக்கியதாக பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுட்டிக்காட்டிய அதேவேளை மக்களது சுகநலன் களைக் கருத்தில் கொண்டு இயற்கைப் பசளையூடாக விவசாய உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் இது தொடர்பிலான அறிவுறுத்தல்கள் துறைசார்ந்தோரால் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது விவசாய விரிவாக்கல் பிரிவு, நீர்பாசனத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், விவசாய ஆராய்ச்சி நிலையம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## யாழ்.விவசாயிகளுக்கு...

ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்றைய தினம் வலி.கிழக்கு விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தினருடனான கலந்துரையாடலின்போதே

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட விவசாய உற்பத்திகளை அதிகரிப்பது, அவற்றுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை, திராட்சைச் செய்கையை விரிவாக்கம் செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக விவசாயிகளுக்கு மானியங்களை வழங்கி அதனூடாக உற்பத்திகளை மட்டுமல்லாது அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுமென அமைச்சர் உறுதிபடத் தெரிவித்தார்.

அத்துடன், விவசாயிகளுக்கான விதை வெங்காயம், விதை உருளைக்கிழங்கு உள்ளிட்ட விவசாய உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்படும் அதேவேளை, திராட்சை செய்கைக்கான உள்ளீடுகளை வழங்குவது தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தினார்.

இந்நிலையில், காலம் தப்பிய மழையால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பிலும் அதற்குரிய இழப்பீடு வழங்குவது தொடர்பிலும் அவதானம் செலுத்திய அமைச்சர் விவசாயத்துறை சார்ந்த அதிகாரிகளும், விவசாயிகளும் புரிந்துணர்வுடனும், விட்டுக் கொடுப்புடனும் செயற்படும் போதே உற்பத்தியை அதிகரிக்க முடியும் எனக்கூறினார்.

இதன்போது பிரதி விவசாயப் பணிப்பாளர் சிறிபாலசுந்தரம், ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## யாழில்...

இலங்கை அரசாங்கத்தின் ஊடாக சுகாதார அமைச்சினால் விநியோகிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை, சாவகச்சேரி, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள போசாக்கற்ற குழந்தைகளுக்கும், கர்ப்பவதிகளுக்கும் இந்தப் போசாக்கு மாக்கலவை அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கடந்த வருடம் முதல் இவ்வாறு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் சோளன், சோயா கர்ப்பதிவதிகளுக்கும் மாவட்டத்தின் சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## கலைஞர்களுக்கும்...

இதில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், 59 வயதிற்கும் குறைந்த கலைஞர்கள் இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும், 60 வயதில் இருந்து வாழ்க்கையின் இறுதி வரை அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் எனவும் கலாசார திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் கலைஞர்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் எனக் கலாசாரத் திணைக்களம் கூறியுள்ளது.

## வடக்கில்...

உயிரிழப்புக்கு காரணமாக அமைந்த யுத்தத்தின் போது பாவிக்கப்பட்ட ஆயுதங்களில் பெருமளவானவை சீனா ஆயுத உற்பத்தி நிறுவனங்களினால் வழங்கப்பட்டவையே என்பதனை சர்வதேச மன்னிப்புச்சபை அடையாளங்கண்டுள்ளதாவும் தெரிவித்துள்ளது.

சிறிய பெரிய கனரக ஆயுதங்கள், வெடிபொருட்கள், பீரங்கிகள், குண்டுகள் என பல்வேறு வகைப்பட்ட ஆயுத தளபாடங்களை சீனா மற்றும் பாகிஸ்தானிய அரசுகளுக்கு சொந்தமான நிறுவனங்கள் ஊடாகவே வழங்கப்படுவதாக தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்பு சபை, இச்செயற்பாடுகள் பாரிய மனித அழிவுகளுக்கும், பாரிய மனித உரிமை மீறல்களை ஊக்குவிப்பதாக அமைகின்றதென தெரிவித்துள்ளது.

அரசால் வடக்கில் பாவிக்கப்பட்டதாக அடையாளங் காணப்பட்ட கிளஸ்ரர் குண்டுகள் என அழைக்கப்படுகின்ற கொத்துக்குண்டுகளின் பாவனைக்கு சர்வதேச அளவிலான தடைக்கும் சர்வதேச மன்னிப்பு சபை அழைப்பு விடுத்துள்ளது.

## யாழ்.பல்கலைக்கழகம்...

இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டவர்களும், பட்டம் பெறுபவரின் உறவினர் ஒருவர் மட்டுமே அரங்கத்தினுள் அனுமதிக்கப்பட்டனர்.

இம்முறை செய்தியாளர்கள் வெளியே நடைபெறும் நிகழ்வுகளை மட்டும் ஒளிப்படம் எடுக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். உள்ளே நடைபெற்ற பட்டமளிப்பு நிகழ்வுகளை ஊடக வளங்கள் பயிற்சி மையத்தினரே ஒளிப்படம் எடுத்து செய்தியாளர்களுக்கு வழங்கினர்.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமான முதல் அமர்வு 10.30 மணிக்கு நிறைவடைந்ததோடு, 10.45 மணிக்கு இரண்டாவது அமர்வு ஆரம்பமாகி நண்பகல் 11.45 மணிக்கு நிறைவடைந்ததுடன், மூன்றாவது அமர்வு 12. 00 மணிக்கு ஆரம்பமாகி 1.15 மணியளவில் நிறைவடைந்தது. மதிய உணவு இடைவேளையின் பின்னர் மாலை 2.15 மணிக்கு நான்காவது அமர்வு ஆரம்பமாகி 3.15 மணியளவில் ஐந்தாவது அமர்வு இடம்பெற்றது.

4.45 மணியளவில் நிறைவடைந்த ஐந்தாவது அமர்வைத் தொடர்ந்து ஆறாவது அமர்வு 5.00 மணியளவில் இடம்பெற்று மாலை 6.00 மணியளவில் நிறைவடைந்தது.

இந்த ஆறு அமர்வுகளிலும் ஆயிரத்த 237 பேருக்கு பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இப்பட்டமளிப்பு விழாவில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தமையால் இராமநாதன் வீதியில் பெரும் வாகன நெரிசல் காணப்பட்டது. (இ)

## யாழ்.இசை...

இந்த இசை விழாவில், பாரம்பரிய இசை நிகழ்வுகள், சாஸ்திரிய இசை நிகழ்வுகள், சமகால இசை நிகழ்வுகள், சர்வதேசக் குழுக்களின் இசை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளது. ஒவ்வொரு நாளும் பகல் மற்றும் மாலை நிகழ்வுகளாக நடைபெறவுள்ளது. (பா)

## அமெரிக்காவிடம்...

வேண்டும். அரசியலமைப்பின் 157 ஆவது பிரிவின் பிரகாரம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தமிழ் மக்களை மென்மேலும் அழிவை நோக்கிப் பின்தள்ளும் செயற்பாடுகளையே சம்பந்தன் குழுவினர் தொடர்ந்தும் மேற்கொள்கின்றனர். இந்தியா மற்றும் அமெரிக்காவிடம் மண்டியிட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியுமெனக் கூட்டமைப்பு நம்புவது வேடிக்கையானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமசந்திரன், பி.அரியனேந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சிறிதரன் ஆகிய ஐவர் அடங்கிய குழு இன்று செல் லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் 22 ஆவது மனித உரிமைகள் மாநாடு இடம்பெற்று வரும் நிலையில் கூட்டமைப்பு ஜெனிவா செல்வது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே இரா.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பிரித்தானியா சென்றுள்ளனர். இவர்கள் அங்கிருந்து ஜெனிவா பயணமாவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பிளவுறும்...

கர்த்திச் செல்லலாம் என்பது தொடர்பிலும் நாம் ஆராய்ந்திருக்கின்றோம். ஆகவே இறுதிக்கட்டமாக நாம் தமிழரசுக் கட்சியுடன் பேசி முடிவுக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கொடுத்துள்ளோம். இல்லையேல் நாம் நான்கு கட்சிகளும் இணைந்து எதிர்வரும் மாத இறுதிக்கிடையில் பதிவு செய்வது என தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.

நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக பதிவு செய் கின்றபோது தான் எமது போராட்டங்களை இன்னும் கீழ் மட்டத்தில் இருந்து கட்டமைப்புக்களை உருவாக்கிக் கொண்டு செல்வது இலகுவாக இருக்கும். எனவே தான் நாம் பதிவு விடயத்தை முன்னிலைப்படுத்துகின்றோம்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று கூட்டணியாக அக்கட்சியின் பெயரை தேர்தலுக்காக பயன்படுத்துகின்றோமே தவிர தனித்தனிக் கட்சிகளாகவே இருக்கின்றோம். சில விடயங்களில் கூட்டமைப்பாக இயங்குகின்றோமே தவிர பெரும்பாலான விடயங்களில் தனித்தனியாக கட்சிகளின் நலன் சார்ந்தே ஒவ்வொருவரும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எனவே, கிராம மட்டத்தில் இருந்து கட்டமைப்புக்களை உருவாக்குவதானது எமது அரசியல் ரீதியிலாக மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்பதற்கும் மக்களின் உணர்வுகளை பிரதிபலிப்பதற்குமான திட்டங்களையும், கொள்கைகளையும் வகுப்பதற்கும் இப்பதிவு பயனுள்ளதாக இருக்கும்.

பதிவு செய்யப்பட்டதன் பின்னர் எமக்குள் இருக்கும் வேறுபாடுகள் களையப்பட்டு அல்லது ஒவ்வொரு கட்சியும் பிரிந்து இருப்பதால் உள்ள பிரச்சினைகள் நீக்கப்பட்டு ஒரே குரலாக ஒரே நிலையில் இருந்து பேசக்கூடியதாக இருக்கும் என்றும் வினோ எம்.பி. சுட்டிக்காட்டினார்.

இது விடயமாக நாம் கடந்த காலத்தில் பேசி வருகின்றோம். 5 கட்சிகளும் கூடிப் பதிவு செய்தல், அதி உயர்பீடம், நிதிக்குழு, தேர்தல் தொடர்பான குழு மற்றும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் குழுக்கள் அமைப்பது தொடர்பாக ஆராந்திருக்கின்றோம். ஆனால் தமிழரசுக் கட்சி எமக்கு நிபந்தனைகளை விதிப்பதும், காலம் தாழ்த்துவதுமான நடவடிக்கையை எடுக்கின்றது. அவர்கள் இதில் விருப்பமில்லாத நிலையில் இருப்பதும் அல்லது சாக்குபோக்குச் சொல்வதும் எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும்.

ஆகவே, இறுதிக்கட்டமாக நாம் தமிழரசுக் கட்சியுடன் பேசி முடிவுக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கொடுத்துள்ளோம். இல்லையேல் நாம் நான்கு கட்சிகளும் இணைந்து எதிர்வரும் மாத இறுதிக்கிடையில் பதிவு செய்வது எனத் தீர்மானித்துள்ளோம் என்றார். (160)

# தடையின்றி அதிகரிக்கிறது டெங்கு
# இருமாதங்களில் 134 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் மட்டும் டெங்குநோய்த்தொற்றிற்கு இலக்காகி 75 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக யாழ். போதனா வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் இந்த வருடத்தின் இரண்டு மாதங்களில் டெங்குத்தொற்றிற்கு இலக்காகி அங்கு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 134ஆக அதிகரித்திருப்பதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

நேற்றையதினம் இவ்வாறு டெங்கு தொற்றிற்கு இலக்காகி யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்து அனுமதிக்கப்பட்ட தலா ஒவ்வொருவரும் இந்த எண்ணிக்கையில் உள்ளடங்குவதாகவும் மேலும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

இவ்வாறு டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்கானவர்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். இந்த நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அந்தந்தப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரும் பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபையின் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# ஜனாதிபதியை சந்தித்தார் சுப்பிரமணியம் சுவாமி



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்திய ஜனதா கட்சியின் தலைவர் கலாநிதி சுப்ரமணியம் சுவாமி நேற்று சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பருத்தித்துறை நகரசபை கட்டடத்திறப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை கட்டடம், நூலகக்கட்டடம் என்பன இன்று பகல் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ்தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உட்பட முக்கிய அதிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடமாகாண துரித அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 4கோடியே 25 இலட்சம் ரூபாசெலவில் அமைக்கப்பட்ட கட்டடம், மற்றும் 75 இலட்சம்ரூபாசெலவில் அமைக்கப்பட்ட நூலகக் கட்டடம் என்பன பருத்தித்துறை நகரசபை தவிசாளர் சட்டத்தரணி சிவா ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும். (01)

## உடற்கல்வி இனி முக்கிய பாடம்

2013ஆம் ஆண்டில் ஒவ்வொரு பாடசாலை மாணவருக்கும் ஏதாவதொரு விளையாட்டு உபகரணத்தை வழங்குவது என்ற முடிவை அரசாங்கம் எடுத்துள்ளது. அத்துடன், சாதாரண தர மாணவர்களுக்கு விளையாட்டை முக்கிய பாடங்களில் ஒன்றாக இணைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது.

## குடும்பத்துடன் மரணம் பாணந்துறையில் பரபரப்பு

பாணந்துறை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.தாய், தந்தை மற்றும் குழந்தை ஆகியோரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் பாணந்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தொலைபேசி அச்சுறுத்தல்

வல்வெட்டித்துறை நகரசபை மற்றும் பருத்தித்துறை நகரசபை கட்டடத் திறப்பு விழா நிகழ்வுகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கலந்து கொள்ளக் கூடாது என தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட இந்த இரண்டு நகரசபை கட்டடங்களும் இன்று திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளக்கூடாது என அநாமதேய தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக அத்தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (116)

# அரசின் அடாவடித்தனம் உச்சம் ஆளும் கட்சி எம்.பிக்களுக்கும் பாதிப்பு

## அரசுமீது சாடுகிறது ஐ.தே.க.

நாட்டில் சர்வாதிகார ஆட்சியினால் பின்பற்றப்படும் மோதல் அரசியலினால் ஆளும் கட்சி அரசியல்வாதிகளும் பாதிக்கப்பட தொடங்கிவிட்டனர் என ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தெரிவித்தது.சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொது செயலாளர் மைத்திரிபால சிறிசேன தனக்கும் தனது குடும்பத்திற்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக கூறியிருப்பது சர்வாதிகார ஆட்சியினால் ஆளும் கட்சி அரசியல்வாதிகளும் பாதிக்கப்பட தொடங்கியிருப்பதை தெளிவாக காட்டுகின்றது என ஐக்கிய தேசிய கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக ஒருவர் நியமிக்கப்பட்டமை சிறிசேன ஓரங்கட்டப்படவுள்ளதை காட்டுகின்றது. இது சிறிலங்கா சுதந்திரக் கட்சி முடிவின் ஆரம்பம் என அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க ஊடகங்களும் தன்னை அரசியல் ரீதியாக ஒழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் சதியில் சம்பந்தப்பட்டிருப்பதாக சிறிசேன கூறியிருப்பதை மிகக் கவனமாக நோக்க வேண்டும் என அகில விராஜ் காரியவசம் கூறினார். மக்கள் இந்த நிலையை விளங்கிக்கொள்ள வேண்டும். அவர்கள் ஜனநாயகத்திற்காகவும் நீதிக்காகவும் உறுதியாக போராட வேண்டும். மக்கள் தமது உரிமைகள் பறிபோவதை இனியும் பொறுத்துக்கொண்டிருக்கக் கூடாது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஏழு துப்பாக்கிகள் மீட்பு; தெற்கில் மூவர் கைது

மெதகம - கெந்தவின்ன - கொஸ்வத்த பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 07 கைத்துப்பாக்கிகளுடன் 03 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மெதகம பொலிஸ் குழுவால் நேற்று அதிகாலை இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'குறித்த துப்பாக்கிகள் குற்றச் செயல்கள் புரிவதற்கு பயன்படுத்தப்பட்டதா? என பொலிஸார் விசாரித்து வருகின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நேற்று பிபில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## புலிகளின் கப்பல்கள் எங்கே? தெற்கில் தலைகாட்டும் சுவரொட்டிகள்

விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம், தங்க நகைகள் மற்றும் கப்பல்கள் எங்கே? என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் கொழும்பில் காணப்படுகின்றன. இது குறித்த சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த மூன்று பேர் கொழும்பு முகத்துவாரம் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். "ஊழலுக்கு எதிரான குரல்" என்ற அமைப்பின் பெயரில் குறித்த சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த மூவரே இவ்வாறு முகத்துவாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## பிரதீப் காரியவசத்துக்கு பிணை

முன்னாள் பிரதம நீதியரசரின் கணவர் பிரதீப் காரியவசம் நேற்று 100 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுவிக்க கொழும்பு நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டார்.அரசாங்க சொத்துகளுக்கு நட்டம் ஏற்படுத்தியமை மற்றும் நிதி நிறுவனம் ஒன்றின் பங்கு கொள்வனவில் மோசடியில் ஈடுபட்டிருந்தமை போன்ற விடயங்கள் தொடர்பில் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவருக்கு பிணை வழங்கப்பட்டது.எனினும் இந்த வழக்கு தொடர்பில் சீர்திருத்தப்பட்ட குற்றபத்திரிகையை தாக்கல் செய்வதாக, ஊழல் ஒழிப்பு திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

இதனை உடனடியாக செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த வழக்கு மீண்டும் ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வேண்டும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(காரைதீவு)

ஆசிரியர்களின் குறைந்தபட்ச சம்பளம் முப்பதாயிரம் ரூபாவாக உயர்த்தப்படல்வேண்டும். அதேவேளை 2006 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை பொது ஆசிரியர் சேவைத் திட்டமடங்கிய சுற்றுநிருபத்தை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்.அத்துடன் வன்னிக்கான 537 தொண்டர் ஆசிரியார்களுக்கான நியமனங்ளை உடனடியாக வழங்க வேண்டும் .அத்துடன் கிழக்கு மாகாணத்திலும் 126 தொண்டராசிரியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.இடமாற்றம் என்ற போர்வையில் ஆசிரியர்கள் பந்தாடப்படுவதை தவிர்க்கவேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானங்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க ஆட்சிமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

யாழ்ப்பாணப் பிரகடனம் என மகுடமிடப்பட்ட இத்தீர்மானங்கள் கடந்த ஞாயிறன்று யாழ்ப்பாணம் அரியாலையிலுள்ள தலைமையகத்தில் சங்கத்தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற ஆட்சிமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்திற்கு நாடெங்கிலுமிருந்து சங்கத்தின் ஆட்சிமன்ற பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.சிரேஸ்ட ஆலோசகர் த.மகாசிவம் சமுகமளித்திருந்தார்.

இதேவேளை, முன்னதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச்சங்க உறுப்பினர்களாக விருந்து ஓய்வுபெற்ற எஸ்.கே.சண்முகலிங்கம் ஏ.ஜெயகுமார் மற்றும் இ.க.நி.சேவைக்கு பதவியுயர்வு பெற்ற பொ.அருணகிரிநாதன் சி.தேவகுமார் அமைச்சரின் பாராளுமன்ற செயலாளர் ப.சுதர்சன் ஆகியோர் ஆட்சிமன்றக்கூட்டத்தில் பொன்னாடை போர்த்திப் பாராட்டிக்கெளரவிக்கப்பட்டனர்.

ஓய்வுபெற்ற எஸ்.கே.சண்முகலிங்கத்தைப் பாராட்டி சங்கத்தின் நிர்வாகச்செயலாளர் கே.நல்லதம்பியும் ஏ.ஜெயக்குமாரைப் பாராட்டி ஆலோசகர் த.மகாசிவமும் பதவியுயர்வு பெற்ற பொ.அருணகிரிநாதனைப்பாராட்டி பிரசாரச் செயலாளர் அ.மடுத்தீனும் சி.தேவகுமாரைப் பாராட்டி பத்திரிகைச் செயலாளர் சி.உதயகுமாரும் அமைச்சரின் நாடாளுமன்ற செயலாளர் ப.சுதர்சனைப் பாராட்டி தென்மராட்சி பிராந்தியச் செயலாளர் சி.தேவநேசனும் வாழ்த்துரைகளை நிகழ்த்தினர்.

ஓய்வுபெற்ற எஸ்.கே.சண்முகலிங்கம் ஏ.ஜெயக்குமார் ஆகியோருக்கான வாழத்துப்பத்திரத்தை முறையே மகாலிங்கராசாவும் சரா.புவனேஸ்வரனும் வாசித்தனர்.அங்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா இவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டுப்பத்திரங்களையும் வழங்கினார்.

## ஐஸ் தொழிற்சாலை திறப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் நாளொன்றுக்கு 25தொன் ஐஸ்கட்டிகளை உற்பத்தி செய்யக்கூடிய ஐஸ்தொழிற்சாலை ஒன்று இன்று பகல் 1.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். ஹற்றன்நசனல் வங்கியின் முகாமையாளர் எஸ். சுந்தரேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிறுவன பிரதிப் பணிப்பாளர் திருமதி டெனின் ரோவின்ஸ் கலந்து கொள்கின்றார்.

கற்கோவளம் ஜெயந்தை கைத்தொழில் பூங்காவில் இத்தொழிற்சாலை அமைந்துள்ளது. (01)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.